Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 23 வியாழக்கிழமை (07.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 200

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# பொதுக் கட்டமைப்பு நகலிற்கு தடையுத்தரவு பிறப்பிக்கமுடியாது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கையொப்பம் இடப்பட்ட பொதுக் கட்டமைப்பிற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கமுடியாதென பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.**

**ஜே.வி.பியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு தாக்கல்செய்த மனுவில் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கவேண்டுமென கோரப்பட்டிருந்தது. அம்மனு குறித்து ஆய்வுசெய்த பிரதம நீதியரசர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.**

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் செயற்பாடுகளை இடைநிறுத்துமாறுகோரி ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 39 பேரும் தாக்கல்செய்த இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பிக்கு மாறுகோரும் மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பொதுக் கட்டமைப்பில் பிராந்திய குழுக்கள் நியமிக்கப்படுவதை இடைநிறுத்துமாறு கோரும் மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தாக்கல்செய்யப்பட்ட இம்மனுவை நேற்று அழைக்கப்பட்டபோதே இந்தத் தடையுத்தரவு மனு நிராகரிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலசூரிய நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளார். யாழ். வந்த அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து பேச்சு நடத்தியதோடு, யாழ். பொலிஸ் நிலையத்தினுடைய செயற்பாடுகளையும் பார்வையிட்டார்.

இதேபோன்று யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் சென்று அப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ச-19)

## சுனாமியால் வீடு இழந்தவர்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளது

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமியால் வீடு இழந்தவர்களுக்கான வீடமைப்புத் திட்ட தற்காலிக வீடுகள் பெரும்பாலும் வழங்கப்பட்டு முடிந்துவிட்டன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை வீடிழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க அரசாங்கம் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.


இடம்பெயர்ந்த 552 ஆயிரம் பேரில் 535 ஆயிரம் பேருக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக சுனாமி நிவாரண விசேட படைத் தலைவர் திலக் ரணவீ

இன்னும் 17 ஆயிரத்து 248 பேர் தற்காலிக கூடாரங்களிலேயே உள்ளனர். ஜூலை 15 இற்கு இடையில் சகல குடும்பங்களுக்கும் அவசர வீட்டுத் தேவையை நிறைவேற்றிவிடுவது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கம் சுனாமி நிவாரண நிதியை தவறாகக் கையாளுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. எத்தனை மக்கள் நிரந்தர வீடுகளுக்கு குடியேறினார்கள் என்பதை தெரிவிக்க அரசாங்கம் தவறிவிட்டதாகவும், 63 ஆயிரத்

## பொலிஸ் புலனாய்வுத்துறையினர் மீது கல்முனையில் நேற்று துப்பாக்கிச் சூடு

### கான்ஸ்டபிள் பலி, சார்ஜன்ட் படுகாயம்



இடம்பெயர்ந்த 552 ஆயிரம் பேரில் 535 ஆயிரம் பேருக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக சுனாமி நிவாரண விசேட படைத் தலைவர் திலக் ரணவீராஜா தெரிவித்தார்.

கையாளுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. எத்தனை மக்கள் நிரந்தர வீடுகளுக்கு குடியேறினார்கள் என்பதை தெரிவிக்க அரசாங்கம் தவறிவிட்டதாகவும், 63 ஆயிரத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சேது சமுத்திரத் திட்டம் குறித்து பாராளுமன்றில் இன்று அறிக்கை

## லக்ஷ்மன் கதிர்காமர் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் இந்தியாவின் நடவடிக்கை குறித்தும், இலங்கையரசின் நிலைப்பாடு குறித்தும் விளக்கமளிக்கும் நீண்ட அறிக்கையொன்றினை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் வெளிவிவகார ஆலோசனை உப குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் சேது சமுத்திரத்தை ஆழமாக்கும் இந்தியாவின் நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்தபோது உப குழுவின் தலைவரான வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் மேற்கண்டவாறு விடயத்தை வெளியிட்டார்.

சேமு சமுத்திரத் திட்டம் தொடர்பாக இலங்கை இந்தியத் தரப்புக்களிடையே இடம்பெற்ற பேச்சுக்களின் விபரங்கள், அப்போது இலங்கைத் தரப்புக்கு வழங்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



(கல்முனை)

கல்முனையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் பொலிஸ் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் கடமை நிமித்தம் சிவில் உடையில் கல்முனை ஆர்.கே.எம். சந்திக்கு அருகில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் அவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் படுகாயமடைந்த இருவரும் கல்முனை தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக உலங்குவானூர்தி மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட சமயம் பொலிஸ் கான்ஸ்டபிள் வழியில் மரணமானார்.

வி.ஜி.கபிலசிறி (வயது 22) என்பவரே மரணமானவராவார். பொலிஸ் சார்ஜன்ட் ஆன ஒக்கர்ஸ் லெப்பை ரபாய்டீன் (வயது 34) என்பவரே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச-4,8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலையும், தலைவரின் பாதுகாப்புமே கரும்புலிகளின் இறுதி விருப்பமாகும்

## தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான்

(கிளிநொச்சி)

கரும்புலி வீரர்கள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தேசியத் தலைவரின் பாதுகாப்பையுமே முன்வைத்துவிட்டு சென்றதைக் கண்டிருக்கின்றோம். அவர்களது விருப்பமான தேசவிடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்த கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையுமென தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக தமிழ் ஊடகம் ஒன்றில் கரும்புலிகள் நாள் தொடர்பாக கருத்துரைத்தபோதே பொட்டம்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாம் எல்லோரும் தமிழரென்று தலை நிமிர்ந்து நிற்பதற்காக தம்மைத் தாமே தற்கொடை செய்து கொண்ட கரும்புலி மாவீரர்களின் நினைவு நாள் இதுவாகும். “பலவீனமான எமது இனத்தின் பலமான ஆயுதங்களாக கரும்புலிகளை உருவாக்கினேன்'' என தலைவர் குறிப்பிட்ட கருத்து நிலைக்கும் சான்றாக, இன்று தமிழினம் தமது சொந்தக் காலில் தம் விடுதலையைப் பெற்றுவிடும். உறுதியுடன் நிற்பதற்குக் காரணமாக இருக்கும் உயர்ந்த இன வலிமையை உருவாக்கித் தந்த கரும்புலி வீரர்களின் நினைவு நாள் இது.

இன்று நாம் நினைவிற் கொள்ளும் கரும்புலி வீரர்கள் தம் தேசத்திற்காக தம்முயிர்களை ஈந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர்களைத் தெரியாதவர்கள் அவர்களைக் கடும் மனம் புடைத்தவர்களாக எண்ணுவது உண்டு. உண்மை அதுவல்ல.

சாதாரண மனிதர்களை விட மெல்லுள்ளம் படைத்தவர்களாக வாழ்ந்தவர்கள் அவர்கள், பொதுவாக எல்லா மனிதர்களைப் போலவே உயிர் வாழ்வதற்கான தேவையும் விருப்பமும் கரும்புலிகளுக்கும் உண்டு.

ஆனால், தம் தேசத்தின் மீதும் தாம் பெற்றுக்கொண்ட கடமையின் மீதும் அவர்கள் கொண்ட உறுதிப்பாடு வாழ்வதற்கான அவர்களது விருப்பத்திற்கு மேலாக தம் கடமைக்காக உயிர் கொடுப்பதற்கான உறுதியை அவர்களுக்குத் தருகின்றது.

கரும்புலி வீரர்கள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தேசியத் தலைவரின் பாதுகாப்பையுமே முன்வைத்துவிட்டுச் சென்றதைக் கண்டிருக்கின்றோம். அவர்களது விருப்பமான தேசவிடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்த கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையும்.

கரும்புலி வீரர்கள் ஒவ்வொருவரினதும் பிரிவின் போதும் அவர்களால் கிடைத்த வெற்றியினால் தலைவர் ஒருபுறம் வெற்றிப் பெருமிதத்துடனும் மறுபுறம் தனது வீரர்களது பிரிவின் ஆற்றாமையோடும் ஒருகலந்த மனநிலையோடு இருப்பதைக் கண்டுள்ளேன்.

கரும்புலி வீரர்கள் ஒவ்வொருவரினது இழப்பும் பிரிவும் எல்லோருக்கும் மனச் சுமையை ஏற்படுத்தும் ஒன்றுதான். ஆனால் தேசவிடுதலையின் தவிர்க்க முடியாத தேவையாக அந்த மாவீரர்களின் பணி அமைந்துள்ளது.

கரும்புலிவீரர்களின் சேவை தேவையான ஒன்றானதாக இருக்கின்றது. தமிழீழ தேசியத்தின் தடைகளை அகற்றி விடுதலையை விரைவு படுத்துவதற்கு கரும்புலிகளின் அர்ப்பணம் அவசியமான தொன்றாகின்றது.

அந்த அர்ப்பணிப்பில் மனந்திறந்த நிலையிலே கரும்புலிகளை நினைவுகூரும் நாம் இன்று ஒரு விடயத்தில் உறுதிகொள்ள வேண்டும். கரும்புலிகளின் தற்கொடையால் வரும் வெற்றிகளை நல்ல தொழில் நுட்ப வளத்தாலும் நல்ல இராணுவ பலத்தாலும் அவற்றை பெறுவதற்கான பொருளாதார பலத்தாலும் ஈட்டமுடியும்.

அதையீட்டுவதில் உலகிலுள்ள தமிழரெல்லோரும் தமிழ் தேசியத்தின் பின்னே அணிதிரள்வதற்கான உறுதியை கரும்புலிகள் நாளான இன்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என பொட்டம்மான் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)




## சிறுவிளம்பரம்

### மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
(9567) இரவு 8.30 வரை


## வீரச்சாவடைந்த துணைப்படைவீரர்கள்

(கிளிநொச்சி)

பல்வேறு சந்தர்ப்பங்களில் வீரச்சாவடைந்த தமிழ்த்தேசிய துணைப் படை வீரர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

15.02.1992 அன்று இறால்குளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் நடத்திய பதுங்கித் தாக்குதலின் போது த.தே.து.வீரர் சிவமாலை - பயஸ்ரநவரட்ணராசா சொ.இடம் நாவலடி றால்குளி, தற். இடம் நாவலடி அகதி முகாம்.

20.07.1991 அன்று கல்வரப்பு பகுதியில் இலங்கை இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது, பூமரத்தடிச்சேனை, ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த த.தே.து.ப.வீரர் சித்திரவேல் கந்தசாமி.

26.09.1993 அன்று இலக்கத்தையில் சிறிலங்கா இராணுவத்தின் பதுங்கித்தாக்குதலின் போது த.தே.து.ப.வீரர் இராசரட்ணம் - சிறிகந்தராசா (குஞ்சி).

07.06.1987 அன்று ஆலங்கேணி பகுதியில் சிறிலங்கா படையினரின் எறிகணை வீச்சின் போது த.தே.து.ப.வீரர் மாரிமுத்து மனோகர கிறிஷ்னானந்தராசா (றஞ்சன்) சொ.இடம் L.V.- 03, கிளிவெட்டி.

08.04.1994 அன்று மல்லிகைத் தீவு பச்சை வெளியில் வைத்து நடாத்திய இராணுவத் தாக்குதலில் த.தே.து.ப.வீரர் மயில்வாகனம் - புலேந்திரன் மேன்காமம், கிளிவெட்டி.

12.10.1996 அன்று பூநகரியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலின் போது த.தே.து.ப.வீரர் செம்புக்குட்டி - மகாலிங்கம் (கெனடி) சொ.இடம் புநகர், ஈச்சிலம்பற்று.

13.07.1988 அன்று கட்டைப் பறிச்சான் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட போது த.தே.து.ப.வீரர் இராசப்பு - யேசுராசா (சிக்குறு) சொ.இடம் சூடை குடா -1.

18.04.2003 அன்று மூதூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரினதும் முஸ்லிம் காடையர்களினதும் தாக்குதலில் காயமடைந்து பின்னர் 25.04.2003 அன்று த.தே.து.ப. வீரர் மாணிக்கராசா- ரமணன் சொ. இடம் 1 ஆம் வட்டாரம், கடற்கரைச் சேனை, மூதூர்.

25.04.1991 அன்று தெகிவத்தை என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவம் பதுங்கித் தாக்கிய போது த.தே.து.ப.வீரர் அருணாசலம் - நல்லதம்பி (கந்தசாமி) சொ. இடம் 58 பாரதிபுரம், கிளிவெட்டி.

25.04.1991 அன்று சிறிலங்கா இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட போது த.தே.து.ப.வீரர் குழந்தைவேல் கண்டுமணி (யோகு) சொ.இடம் சம்பூர் -5.

05.03.1996 அன்று திருகோணமலை கடற்பரப்பில் ஏற்பட்ட தாக்குதலின் போது த.தே.து.ப.வீரர் இராசேந்திரம் - மகேந்திரராசா சொ.இடம். கடற்கரைச்சேனை பாடசாலை முன்பாக.

03.11.1988 சந்தன வெட்டயில் வைத்து இந்திய இராணுவத்தின் பதுங்கித்தாக்குதலின் போது த.தே.து.ப.வீரர் செல்லையா- காளிராசா, சொ.இடம் 3ம் வட்டாரம், கட்டைப் பறிச்சான் ஆகியோர் வீரச்சாவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

## இராசிபலன்

07.07.2005
(ஆனி 23, வியாழக்கிழமை)
பிரதமை முன்னிரவு 7.41 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 7.33 மணிவரை
இராகுகாலம் 1.28 - 2.58 மணிவரை
சுபநேரம் 7.28 - 8.58 மணிவரை
அமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் ஆர்வம், மனச்சஞ்சலம், காரிய தாமதம், புதிய விடயம். |
| இடபம் | பிரயாண நன்மை, முயற்சி கைகூடும், பெருமையடைதல், போசனசுகம். |
| மிதுனம் | கடின வார்த்தை, வீண்செலவு, காரிய இடையூறு, சிந்தனை மிகுதி. |
| கடகம் | நல்லமுயற்சி, அறிஞர்கள் சந்திப்பு, பிரயாணம், புதிய தகவல். |
| சிங்கம் | காரிய அலைச்சல், போசனசுகக் குறைவு, சோம்பல்நிலை, பணவிரயம். |
| கன்னி | தனதானியச் சேர்க்கை, பெருமையடைதல், உறவினர் வருகை, காரியசித்தி. |
| துலாம் | சுபநிகழ்வு, நல்ல தகவல், கடின முயற்சி, பிறர் உதவி. |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, வயிற்றுக்கோளாறு, வீண் பயம், பிரயாணம். |
| தனுசு | ஆரோக்கியக்குறைவு, அச்சமான நிலை, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம். |
| மகரம் | அபூர்வ சந்திப்பு, குடும்பமகிழ்ச்சி, புதிய பொருள் சேர்க்கை, தொழில் முயற்சி. |
| கும்பம் | சத்துருஜெயம், தடைப்பட்டகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, புதிய தகவல். |
| மீனம் | காரிய இடையூறு, பணவிரயம், தொழிலில் பிணக்கு, ஆரோக்கியக்குறைவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## 2004ஆம் ஆண்டு தரம் 8,10இல் கற்ற மாணவர்களது கல்வி அடைவு மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டில் தரம் 8,10 இல் கல்வி கற்ற மாணவர்களது கல்வி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு உலக வங்கியானது நடவடிக்கை எடுத்துள்ளது.

வடககு-கிழக்கு மாவட்டங்களில் அனைத்து வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் 2004 ஆம் ஆண்டு தரம் 8,10 இல் கல்வி கற்ற மாணவர்களது கல்வி மதிப்பீட்டினை உலக வங்கியானது கொழும்பு பல்கலைக்கழகம் ஊடாக மேற்கொள்ளவுள்ளது.

இக்கல்வி மதிப்பீடானது விஞ்ஞானம், கணிதம், முதன்மொழி ஆகிய பாடங்களுக்கே மேற்கொள்ளப் படவுள்ளது. இவ் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு வலயக் கல்விப் பணிமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக வங்கியினால் தேசியமட்டத்தில் தரம் 4 இல் கல்வி கற்ற மாணவர்களது கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களின் மதிப்பீட்டினை மேற்கொண்ட போது வடமாகாணம் இறுதி இடத்தில் அதாவது ஒன்பதாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-19)

## விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்படமாட்டாது

தங்களது பாதுகாப்பான பயணம் தொடர்பாக விடுதலைப் புலிகள் காலக்கெடு விதித்துள்ள போதிலும் புலிகளின் தரைவழிப் பயணத்திற்கு தற்போது வழங்கப்படும் பாதுகாப்பை மேலும் அதிகரிக்கப் போவதில்லை என அரசு தரப்புத் தெரிவித்துள்ளது.

புலிகளின் போக்குவரத்திற்கு தற்போது வழங்கப்படும் பாதுகாப்பே தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் அந்தவேளையில் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமைய பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்படும் எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்துள்ளார். (து-04)

## அவசர கலந்துரையாடல்

அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்களையும் பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

## போ/வ விதிகளை மீறியமை ரூ.26,500 அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினால 20 வழக்குகள் கடந்த 4 ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரம் முன்நிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

வாகன அனுமதிப் பத்திரம் இல்லாமை, தலைக்கவசம் அணியாமை, வாகன வரிகட்டாமை போன்ற குற்றங்கள் தொடர்பாகவே இவ் வழக்குவிசாரணை இடம்பெற்றது. இக் குற்றங்கள் அனைத்திற்கும் 26500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-19)

## நாட்டைக் குழப்பத்திற்குள் அரசாங்கம் தள்ளியுள்ளது

(கொழும்பு)

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் உட்பட எந்தவொரு விடயத்திலும் உடன்பாடு காணாத கூட்டமைப்பு அரசாங்கம் தற்போது நாட்டைக் குழப்பமானதொரு சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் விடயம், சுனாமி அனர்த்த நிவாரணத் திட்டம் ஆகய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் கூட்டமைப்பு அரசாங்கத்திலும் அங்கம் வகித்த பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மககள் விடுதலை முன்னணிக் கட்சிக்கும் இடையே இணக்கம் காணப்படவில்லை. இதன் பிரதிபலிப்பே தற்போது நாட்டில் மக்களும நிர்வாகமும் குழப்ப நிலையில் உள்ளமைக்குக் காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், சுனாமி நிவாரண சபை குறித்து அரசியல் நோக்கத்திற்காகவே இன்று முஸ்லிம் அரசியல் கட்சித் தலைமைகள் ஓலமிடுகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-2)

## போலி நாணயத்தாள் புழக்கத்தில் மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

நாட்டின் புழக்கத்திலுள்ள ஒரு மில்லியன் நாணயத்தாள்களில் 5 நாணயத்தாள்கள் போலியானவை என்று இலங்கை மத்தியவங்கியின வர்த்தக நிதிப் பிரதி அத்தியட்சகர் தமுஹ குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டிற்குள் கணனியைப் பயனபடுத்தி அச்சிடப்படும் வர்ண அச்சியந்திரங்கள் கொண்டுவரப்படுகின்றமையே இந்த போலி நாணயத்தாள் அதிகரிப்பிற்குப் பிரதான காரணம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வர்ணப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள் ஊடாகவும் போலிநாணயத் தாள்கள் தயாரிக்கப்படுவதற்கான தகவல் கிடைத்துள்ளதாக குணவர்த்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# எமது கட்சி ஆட்சியில் 24 மணித்தியாலத்தில் மாகாணசபை முறை இரத்துச் செய்யப்படும்

## ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை விற்பனை செய்தல் மற்றும் நாட்டைப் பிரித்தல் என்பவற்றுக்கு எதிராகவே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு நாட்டை விற்பனை செய்வதை கட்டுப்படுத்த முடிந்த போதிலும் அது பிரிவடைவதை தடுக்கமுடியாமல் போயுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் வெகுவிரைவில் அந்த இலக்கையும் தாம் அடையவுள்ளதாக நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே சோமவன்ஸ அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதிகாரம் உண்மையான அங்கத்தவர்களிடம் கிடைக்கும் போது மீண்டும் அந்தக் கட்சியுடன் இணைவது குறித்து கவனம் செலுத்த மக்கள் விடுதலை முன்னணி தயார் எனவும் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக மக்கள் விடுதலை முன்னணி எப்போதும் ஏற்றுக்கொள்ளாது என அவர் குறிப்பிடடுள்ளார்.

எவ்வாறாயினும், வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் ஜனநாயகத்தை காப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி செயற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் கீழ் உருவாக்கபபடும் அரசாங்கத்தின் கீழ் 24மணித்தியாலங்களுக்குள் மாகாணசபை முறைமை இரத்து செய்யப்படும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க குறிப்பிட்டுளளார். (அ-9)

# தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மறறும் விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில்,

இன்று வியாழக்கிழமை 5.00மணிககு இருபாலை விக்னேஸ்வரா அணியை எதிர்த்து சுன்னாகம் கலைவாணி அணி மோதவுள்ளது. (அ-7)

# சகல வளங்களையும் பயன்படுத்தி சுய தொழிலில் ஈடுபடவேண்டும்

## மட்டு-அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு

பிறரை எதிர்பாராது எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும் என மட்டு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நரிப்புல் தோட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு ஆரம்ப நிகழ்வில் அதிதியாக கலந்து கொணடு உரையாற்றும் போதே சிறப்புத் தளபதி கேணல் பானு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் சேசசர் தலைமையில் ஆரம்பமானது. முதல நிகழ்வாக அகவணக்கம் இடம்பெற்றது. பிரதம அதிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட கட்டளை சிறப்புத் தளபதி கேணல் பானு, மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியல பொறுப்பாளர் தயாமோகன், தளபதி பிரபா மற்றும் வவுணதீவு உதவி பிரதேச செயலாளர் ந.வில்பரெத்தினம், மட்டக்களபபு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி க.தங்கேஸ்வரி மற்றும் நரிப்புல் தோட்ட நடேஸ்வரா வித்தியாலய அதிபர், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மற்றும் வீட்டுப் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இருபதாண்டு நிறைவை முன்னிட்டு நிறுவப்படும் மேற்படி வீட்டுத் திட்டத்தில மூன்று பயனாளிகளின் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இங்குள்ள மக்களின் நிலை மிகவும் துன்பகரமான நிலையில் காணப்படுகின்றது. படுவான்கரையில் பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இங்கு வீடமைப்பதற்கான நோக்கம் சுகாதார முறையில் மக்கள் வாழ வேண்டும் என்பதுதான்.

புலம்பெயர்ந்த மக்கள் நிதியைச் சேகரித்து தருகின்றார்கள். அவர்கள் இங்குள்ள மக்களின் நிலையை அறிந்த வண்ணம் உள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல வளங்களும் உள்ளது. கடல், ஆறு மீன்பிடி வேளாண்மை செய்கை, வீட்டுத் தோட்டம் போன்ற சுயதொழில் முயற்சிகளில் நீங்கள் ஈடுபடவேண்டும். கொக்கட்டிச்சோலையில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி உள்ளது. இவைகள் ஊடாக சுயதொழிலுக்கான கடன் பெற்று தொழில் செய்ய வாய்ப்பு உள்ளது. நாம் பிறரை எதிர்பாராது எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கூறினார்.

துணை அரசியல் பொறுப்பாளர் தயாமோகன் உரையாற்றுகையில், வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் நரிப்புல தோட்டம் ஒரு கிராமமாகும். இக் கிராமத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மிகவும் கஷ்டப்பட்ட குடும்பங்கள் உள்ளன. குடிசைக்குள் இருந்து பார்த்தால் வானம் தெரியும். இந் நிலையை மக்கள் மத்தியில் மாற்ற புனர்வாழ்வு கழகம் மீள் கட்டுமானம் போன்ற பணிகளை மேற்கொள்வது அவசியம் என கேட்டுககொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி தங்கேஸ்வரி தனதுரையில், இப்பிரதேச மக்கள் போராட்டத்தினால் பல துன்பங்களை அனுபவித்து வந்தவர்கள். இவர்களை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல செயற்திட்டங்களை செய்து வருகின்றது. அவர்களின் பணிகள் சொல்லில் அடங்காதவைகள். இந்த செயற்திட்டத்திற்கு இந்த பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

உதவி பிரதேச செயலாளர் என். வில்வரெத்தினம் கூறுகையில், இவ் வவுணதீவு பிரதேசமானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். இங்கு பல வழிகளிலும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது எனவும் அரசாங்கத்தினால் சிறு அபிவிருத்தி பணிகளையே இங்கு மேற்கொண்டுள்ளார்கள் எனவும் இக்கிராமத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அபிவிருத்திக்காக தெரிவு செய்தது இக்கிராம மக்களின் ஒரு கொடையாகும் எனக் கூறினார். (அ-4)

# ரூ.82 மில்லியன் நிவாரண நிதி பிரதமரின் தனிப்பட்ட கணக்கில்!

(கொழும்பு)

தனிப்பட்டவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை அழிப்பதை விடுத்து ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையினை மேம்படுத்த அன்னைவரும் முன்வரவேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பின் ஜோன் அமரதுங்க, ஆழிப்பேரலையின் பின்னர் கிடைத்த 82 மில்லியன் ரூபா பிரதம மந்திரியின் தனிப்பட்ட கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகத தெரிவித்து ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கோரியிருந்தார்.

இந்நிலையில் ஒத்திவைப்பு விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, இதன்போது கருத்துரைத்த ஆளும் கட்சியின் உறுப்பினர்கள், பிரதமமந்திரி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவாவதைக் கண்டு பயந்த நிலையல் ஐக்கய தேசியககட்சி அவருக்கு எதிராக பொய்ப் பிரசாரங்களை மேறகொண்டு வருவதாகக் குற்றம் சுமத்தினர். (ரு-4)

# தமிழீழ வைப்பகத்தின் 12வது கிளை பரந்தனில்

தமிழ் மக்களினதும் தமிழீழ அரசினதும் அடித்தளமாக தமிழீழ வைப்பகம திகழ்கிறது என்று தூயவன் அரசறிவயல் கல்லூரி விரிவுரையாளர் அரசணணா புகழாராம் சூட்டினார்.

பரந்தனில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த தமிழீழ வைப்பகத்தின் 12 ஆவது கிளை திறப்பு நிகழ்வில் விரிவுரையாளர் அரசண்ணா பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில தமது உயிர்களை ஆகுதியாக்கிய கரும புலி மாவீரர்களை நினைவு கூரும் இந் நாளில் தமிழீழ வைப்பகத்தின கிளை பரந்தனில் திறக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

கடந்தகால போர் நெருக்கடிகளின் போது அரச வங்கிகள் தமிழ் மக்களிடம் இருந்து திரட்டிய நிதியினை தென னிலங்கைக்கு அனுப்பி வைக்கும்போது தமிழ் மக்களின் பணமே தமிழ் மக்களுக்கெதிராக பயன்படுத்தப்பட்டதை நாம் அறிவோம்.

இந்நில்லயில் எமது விடுதலை அமைப்பு தமிழீழ வைப்பகத்தினை தொடங்கி தமிழ் மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ் மக்களுடையதும் தமிழீழ அரசினதும் அடித்தளமாக தமிழீழ வைப்பகம் விளங்கி வருகிறது.

அடுத்த ஆண்டில் தமிழீழ வைப்பகம 13 கிளைகளை திறக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் அதனுடைய செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்றார். (அ)

## பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்ட

# புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரை நாளை ஆஜராகுமாறு பணிப்புரை

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் அரசாங்கத்தின் சார்பில் கையொப்பமிட்ட புனர்வாழ்வு அமைச்சின் செயலர் எம்.எஸ்.ஜெயசிங்கவை பாராளுமன்ற கணக்காய்வு சபையின் முன்னால் அஜர்படுத்த வேண்டும் என்ற யோசனை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்தசமரசிங்க இதற்கான யோசனையினை முன்வைத்தார்.

அரசியல் அமைப்பின் பல சரத்துக்களை மீறியுள்ள இந்தப் பொதுக்கட்டமைப்பு. உடன்படிக்கையானது பாராளுமனறத்தின் நிதிக்கட்டுப்பாட்டையும் மீறியிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

எனவே இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட எம.எஸ்.ஜெயசிங்க பாராளுமன்ற கணக்காய்வு சபையின் முன்னால் ஆஜராக வேணடும் என அவர் தெரிவித்தார்.

இதற்குப் பாராளுமன்றத்தில் எதிர்ப்புக் காட்டப்படாத நிலையில் நாளை ஜெயசிங்க பாராளுமன்றக் கணக்காய்வு சபையின் முன்னால் ஆஜராக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு-4)

# பொதுக்கட்டமைப்புக்கான எதிர்ப்பு தினம் நாளை

## அம்பாறை அனைத்து பள்ளிவாசல் சம்மேளனம் தீர்மானம்

(அம்பாறை)

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் இணைத்துக் கொள்ளப்படாமையானது சிறுபான்மையினமொன்று இரண்டாவது சிறுபான்மையினத்தை அடிமையாக்கிய செயலாகும் என அம்பாறை அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

நேறறு முன்தினம் நிந்தவூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்திலேயே இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பானது முஸ்லிம்களை நிர்க்கதிக்குள்ளாக்கும் என்பதால் அனைத்து முஸ்லிம் தரப்பினரும் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் 8ஆம் திகதியை ஆழிப்பேரலை பொதுக்கட்மைப்புக்கான முஸ்லிம்களின் எதிர்ப்புத் தினமாக பிரகடனம் செய்வதாகவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ரு-4)

# தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் இம்மாத இறுதிப் பகுதியில் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கிராம அபிவிருத்தச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றில் இருந்து தலா 25 பேர் வீதம் மூன்று பிரதேச செயலகர் பிரிவிலும் இருந்து இப் பயிற்சிநெறிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தலைமைத்துவ ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்படவுள்ள இத் தலைமைத்துவ பயிற்சி வகுப்பானது மூன்று நாட்கள் பருத்தித்துறை பரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெறவுள்ளன. (ரு-19)

# இன்று ஒரு தகவல்

## புத்திசாலி

யாரையும் ஏமாற்றவும் கூடாது. ஏமாந்து போகவும் கூடாது. அதற்கு சாமர்த்தியம் வேண்டும்.

ஒரு ஊரில் ஒரு பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மை யிலேயே வீணை வாசிப்பதில் மிகவும் கெட்டிக்காரர். அவரது வீணை வாசிப்பைக் கேட்டுவிட்டு ஒரு பெரிய மகாராஜா என்ன செய்தார் தெரியுமா? ஆள் உயரத்துக்கு ஒரு வீணையைத் தயார் செய்து அதை அந்த வித்துவானுக்கு பரிசாகக் கொடுத்துவிட்டார். அதன் பின் அந்த வித்துவான் எந்த ஊருக்குப் போனாலும் அந்தப் பெரிய வீணையை எடுத்துக் கொண்டு போய்த் தான் வாசிப்பார்.அந்தக் காலத்தில் அவர் தான் வீணை. வாசிப்பதில் முதலிடம்.

அதேபோல் இன்னொரு வித்துவான் இருந்தார். அவர் கடம் வாசிப்பவர். அவரது காலத்தில் அவர்தான் கடம் வாசிப்பதில் முதல் இடம். இப்படி இவர்கள் இரண்டுபேரும் அவரவர் வாசிப்பில் மிகவும் உச்சநிலையில் இருந்தனர். இருந்தாலும் அந்த இரண்டு பேருக்கு இடையிலும் ஏதோ மனஸ்தாபம். இவர் செல்லும் கச்சேரிக்கு அவர் செல்வதில்லை. அவர் போகும் கச்சேரிக்கு இவர் போவதில்லை.

இவர்களிருவரையும் எப்படியாவது ஒரே மேடையில் வாசிக்க வைத்துவிட வேண்டும் என்பது மக்களின் விருப்பம். இருந்தாலும் அது நடக்காத காரியமாகவே இருந்தது. இரண்டு துருவமாக இருப் பவர்களை எப்படி ஒன்று சேர்க்க முடியும்?

ஒரு கிராமத்துப் பண்ணையார் இருந்தார். பெரிய சவடால் பேர் வழி. இருந்தாலும் கௌரவத்துக்கு ஆசைப்பட்டவர். அவரது வீட்டில் ஒரு கல்யாணம் வந்தது. அவரது மகளுக்கு கல்யாணம். இந்தக் கல்யாணக் கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரு பெரிய விதது வான்களையும் கொண்டுவர வேண்டும் என்று நினைத்தார். ஆனால் இவர் வருகிறார் என்றால் அவர் வரமாட்டார். அவர் வருகிறார் எனறால் இவர் வரமாட்டாரே! என்ன செய்வது? என்று யோசித்தார்.

சரி! இவர் வருகிறார் என்ற விடயத்தை அவரிடம் சொல்ல வேண் டாம். அவர் வருகிறார் என்ற விடயத்தை இவரிடம் கூற வேண்டாம். இரண்டு பேரிடமும் பொய் சொல்லி அழைத்துக் கொண்டு வந்து விடுவோம். கச்சேரி சமயத்தில் திடீரென்று மேடையில் ஏற்றி விடு வோம். மேடையில் ஏறிய பின்பு எல்லோருக்கும் முன்னால சண்டை பிடித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தார். அதேபோல் ஏற்பாடும் செய்துவிட்டார்.

அந்த வீணை வித்துவானையும் கட வித்துவானையும் தனித் தனியாக ஒருவர் வந்திருப்பது இன்னொருவருக்குத் தெரியாமல் அழைத்துக்கொண்டு வந்து இரண்டு தனித்தனி வீடுகளில் தங்க வைத்தார். அன்று மாலையில் கச்சேரி. இவர்கள் காலையிலேயே வந்து தங்கிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் வந்து சேர்ந்த கொஞ்சநேரத்தில் உண்மை அரசல் புரசலாக அவர்களுக்கு தெரிய ஆரம்பித்துவிட்டது.

வீணை வித்துவான் யோசித்துப் பார்த்தார்.இதோ பாருங்கள் அந்தக் கட வித்துவானுடன் நான் சேர்ந்து வாசிப்பதில் எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் உங்களிடம் ஒரு விடயத்தைக் கூற வேண்டியது எனது கடமை. அவர் எத்தனை கொண்டு வந்திருக்கிறார் என்று கவனித்தீர்களா? என்றார். "கவனித்தேன் இரண்டு கொண்டு வந்திருக்கிறார் என்றார் இவர். "அது எதற்கென் றால் ஒரு கடம் உடைந்துவிட்டால் இன்னுமொன்றை உபயோகப் படுத்திக் கொள்வதற்கு! ஒரு சுப காரியத்தில் மேடையில் பானை உடைந்துவிட்டால் அது நன்றாக இருக்குமா? யோசித்துப் பாருங்கள் என்றார். "நீங்கள் கூறுவது நியாயம் தான் நமது கச்சேரியில் கடமே வேண்டாம் அவருக்குப் பேசிய பணத்தைக் கொடுத்து திருப்பி அனுப்பி விடுகிறேன்"என்று கூறிவிட்டு நேராக அவரிடம் போனார். பணத்தைக் கொடுத்து கணக்குத் தீர்த்து விட்டு விஷயத்தைச் சொன்னார்.

உடனே கட வித்துவான் இந்தப் பண்ணையாரைப் பார்த்து நீங்கள் கூறுவ்து சரி. இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் கூற வேண்டியது எனது கடமை என்றார்.'என்ன அது? என்றார் இவர். அந்த வீணை வித்துவானுடைய வீணை ஆள் உயரம் உள்ளது. அதன் மீது பட்டுத் துணி போர்த்தி முன்னால் இருவரும் பின்னால் இருவருமாக நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார்கள். அது பார்ப்பதற்கு எப்படி இருக்குமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள் என்றார்.

பண்ணையார் யோசித்துப்பார்த்தார். பாடையைத் தூக்கும் ஞாபகம் வந்தது. "சுபமுகூர்த்தம் நடக்கும் வேளையில் இது தேவையா? என்று யோசித்துப் பாருங்கள்" என்றார் கடவித்து வான். பண்ணையார் யோசித்தார். என் வீட்டுக் கல்யாணத்துக்குக் கச்சேரியே வேண்டாம் என்று கூறிவிட்டு அவரையும் கணக்குத் தீர்த்து அனுப்பிவிட்டார்.

இந்த மூவரில் யார் கெட்டிக்காரர் என்று நினைக்கிறீர்கள்? மூவரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவரில்லை.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சுனாமியால் பாதிப்படைந்த நாட்டை நான் ஜனாதிபதியானால் 3 மாதத்திற்குள் புனரமைப்பேன் -ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குக் காரணம் தற்போதைய அரசாங்கமே எனவே இதிலிருந்து அவர்கள் ஒருபோதும் தப்பமுடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாங்கள் தற்போது ஜனாதிபதித் தேர்தலை கோரி நிற்கின்றோம்.எங்களுக்கு மக்களின் நலனே முக்கியம். தறபோது ஆட்சியில் உள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் காவாலோ அல்லது அரசாங்கத்தாலோ எதுவும் செய்ய முடியாது.

சோபையிழந்து காணப்படும் இவ் அரசாங்கத்தால் இனியும் ஒன்றும் செய்யமுடியாது. பதவியை விட்டு விலகுங்கள் என நாங்கள் பலமுறை கோரிப் பார்த்தோம் எனினும் மக்களின் ஆணை இன்னும் எங்களுக்குக் கிடைக் கவில்லை.

எனவேதான் நாங்கள் தற்போது ஜனாதிபதித் தேர்தலை கோரி நிற்கின்றோம்.

நாங்கள் மக்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கவுள் ளோம். இதற்காக ஐக்கிய தேசியக் கட்சி முழு முனைப் புடன் செயற்பட்டு வருகின்றது.

நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின் தெற்கு,மேற்கு,வடக்கு,கிழக்கு மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங் கள் உட்பட எல் லாப் பிரதேசங்களி லும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடு களை மூன்றே மாதங் களில் செய்து முடிப் போம்.



இதேவேளை, சுனாமியால் பாதிக் கப்பட்டவர்களுக்கு அனைவரும் உதவி செய்ய வேண்டும். இவ் அனர்த்தம் ஏற்பட்டு 6மாதங்களாகியும் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. எனவே இதனை நாங்கள் பொறுப் பெடுத்துச் செய்யவுள்ளோம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட்வர்களுக்கு கட்சியின் சார்பில் உறுதி கூறுகின்றேன். சுனாமி வந்ததால் கூட்டு முன்னணியினர் பெருமளவு இலாபம் பெற்றார்கள்.

மக்களைப் பாதுகாக்க, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஜனாதிபதித் தேர்தலைக் கோரு கின்றோம். அதில் வெற்றி பெற்று அனைத்தையும் சரி செய்வோம். என்னோடு 12ஆம் திகதி அனைவரும் கொழும்புக்கு வாருங்கள். அனைத்தையும் புரிய வைக்கிறேன் என ரணிலவிக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

(அ-4)

# அதிகாரிகளின் ஒழுங்கீனத்தால் தெற்கில் அபிவிருத்தி இல்லை

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே விசனம்

(கொழும்பு)

கடல்கோள் நிவாரண வேலைத்திட்டங்கள் வடக்கு-கிழக்கிலேதான் முதலில் சிறப்பாக முடிக்கப்படும். அங்கு எந்தவொரு முட்டுக்கட்டையும் கிடையாது. அங்குள்ளவர்கள் கூறுவதை அதிகாரிகள் கேட்காவிட்டால் வெடிவைக்கப் படுவார்கள். அவர்களின் உடல்கள் கூடக் கிடைக்காது. இதனாலேயே வட-கிழக்கில் அபிவிருத்தித் திட்ட வேலைகள் வெற்றிகரமாக நிறைவேறுகின்றன. அவ்வாறானதொரு நிலை தெற்கில் இல்லாததால் அதிகாரிகள் ஒழுங்காக கடமைகளைச் செய்கிறார்களில்லை.

இவ்வாறு வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் 60ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பலப்பிட்டி பாராலியவில் புதிதாகக் கட்டப் பட்ட 100 வீடுகளை பயனாளிகளிடம் கைளித்த பின்னர் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,

கடல்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு இதுவரை வீடொன்றைக் கூட கட்டிக் கொடுக்க முடியவில்லை.இதற்காகவே ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கி வடக்கு-கிழக்கு மக்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளார். அதைக்கூட சில குறுகிய எண்ணம் படைத்தோர் புலிகளுக்கு ஜனாதிபதி உதவி செய்வதாகக் குற்றம்சாட்டுகின்றனர்.இதனால் பெரும்பான்மை மக்களையிட்டு வடக்கு,கிழக்கிலுள்ளோர் மாத்திரமல்ல வெளிநாட்டுப் பிரஜைகளும் என்ன நினைப்பார்கள்? என்று சிந்திக்க வேண்டும். நுகர்வோர் பொதுக்கட்டமைப்பை பூதாகரமாகக் காட்டி நாட்டை, புலிகளுக்குப பிரித்துக் கொடுக்க ஜனாதிபதி ஆயத்தமாகிறார் என பொய் வதந்திகளையும்,விசக்கிருமிகளையும் மக்களின மனதில் விதைத்து நாட்டை அழிவின் பாதையில் இட்டுச் செல்ல இனவாதிகள் முற்படுகின்றனர். இவர்களை விட்டு மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

அரசியல் என்பது மக்கள் சேவையாகும். எமக்கு வாக்குகள் அழித்தோருக்கும் வாக்குகள் அழிக்காதவர் களுக்கும் ஒன்றுபோல் சேவை செய்வது அரசியல் வாதிகளின் கடமையாகும். கட்சியின பாகுபாடுகளை நாங்கள் பார்க்காததால்தான் நாம் சக்தி பெற்றுள் ளோம்.ஆனால் சிலர் பச்சை நிறத்துக்கு மாத்திரமே வேலை செய்கிறார்கள்.

கடல்கோள் அகதிகளானோருக்கு நிவாரணங்கள் வழங்குவதில் கால தாமதங்கள் ஏற்பட்டன. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முழுப்பொறுப்பாளிகள். அரசாங்கமும் சில தவறுகளைச் செய்தது. அதுதான முழுக்க முழுக்க அதிகாரிகளை நம்பி, அனைத்துப் பொறுப்புகளையும் அவர்களிடம் ஒப்படைந்தமையாகும். அவர்கள் துரோகம் இழைத்துவிட்டனர்.

கடல்கோளால் அகதிகளானவர்களுக்கு உதவிகளை வழங்கும்போது, உபகார வேலைத்திட்டங்களைச் செய்யும் போது, தென்னிலங்கையில் உள்ள எந்தவொரு முட்டுக்கட்டையும் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ அதிகாரிகளுக்கு இல்லை. தெற்கு-மேறகுப் பகுதிகளைவிட வடக்கு- கிழக்கில் அவசரமாக வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை தெற்கில் உள்ளோர் மனதில் பதிய வைக்கவேண்டும்.

வடக்கில் அரசியல்வாதிகள் கூறுவதை அதிகாரிகள் நிறைவேற்றாது போனால், வெடிவைக்கப் படுவார்கள். அவர்களின் சடலங்கள் கூட கிடைக் காது. அதனால்த்தான் வடக்கில் அனைத்து வேலைகளும் வெற்றிபெறுகின்றன. அவ்வாறான செயற்பாடுகள தெற்கில் இல்லாததால்தான் அதிகாரிகள் ஒழுங்காகக் கடமைகளைச் செய்கிறார்கள் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-4)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற வேலையற்ற டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அவர்களுக்கான வேலைவாய்ப்பும் வடமேல் மாகாண நியமனம் தொடர்பான முக்கிய பல விடயமும் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து வேலையற்ற டிப்ளோமாதாரிகளையும் தவறாது கலந்துகொள்ளும்படி சங்கத்தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார்.

(அ)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 3ஆம்திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும், தீர்த்தத்திருவிழா 04.08.2005 வியாழக்கிழன்ம முற்பகல் 9.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

(அ-2)

# மட்டக்களப்பு சித்தாண்டியில் கைக்குண்டுடன் இளைஞன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டியில் கைக்குண்டுடன் சென்ற இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த தவராசா (வயது-26) என்ற இளைஞனே கைது செய்யப்பட்டவராவார்.

மோட்டார் கைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அவரை வழிமறித்த இராணுவத்தினர் அவரைப் பரிசோதனை செய்த போது அவரிடமிருந்து இரண்டு கைக்குண்டுகளை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)

# குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் முஸ்லிம் கொலனியில் நேற்று முன்தினம் இரவு சலூன் உரிமையாளர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

மகாலிங்கம் அருணாதன் (வயது-29) என அடையாளம் காணப்பட்டுள்ள இந்நபர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும், கடந்த 3 வருடங்களாகக் குறிப்பிட்ட இடத்தில் சலூன் வைத்துத் தொழில் செய்து வந்தவர் என்றும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு சலூனை மூடிவிட்டு பின் பக்கமாக இவர் இரவு உணவுக்காகச் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இரண்டு இளைஞர்கள் இவரை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(ச-4)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

31 லேசான் இந்தியன் நிறுவனத்தில் இருந்த ஊடகவியலாளர்கள் நான், சிலோன் என்று அறிந்ததும் என் மீது ஒரு வகையான மரியாதை செலுத்தினார்கள்.

சில ஊடகவியலாளர்கள் எழுந்து வந்து கைதந்தார்கள். எவ்வளவு உயரிய பண்பு. பளிச்சென்ற அவர்களின் முகங்கள் உள்ளத்தூய்மையைக் காட்டிநின்றன.

இப்படி யாழ்ப்பாண ஊடகவியலாளர்களும் இருந்தால் நன்றாக இருக்குமேயென நான் நினைத்ததுண்டு.

அந்த நினைப்பு வெறும் கற்பனைக் குரியதேயல்லாது ஒருபோதும் நிஜப்படமாட்டாதென்ற உண்மை அசரீரி போல என் உள்ளத்தில் ஒலிக்க, சோகமே எஞ்சியது.

## கீழானூர் புறப்பட்டோம்

காலை 7.15 மணியளவில் தினமணியின் செய்தியாளர் வந்து சேர்ந்தார். 7.30 மணிக்கு குளிரூட்டப்பட்ட பெரிய மினிபஸ், பயணத்திற்குத் தயாராக இருந்தது.

லேசான் இந்தியன் நிறுவனத்தில் தரப்பட்ட ரீயைக் குடித்துவிட்டு பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் (Managing Director) பொறியியலாளருமான பிரதீப் நெவாற்ரியா (Pradeep Nevatia) உட்பட நிறுவனத்தின் முக்கிய உத்தியோகத்தர்களும் உடன் வந்திருந்தார்கள்.

கூடவே, சன் ரீவியின் ஒரு பிரிவான சன் நியூஸ் (Sun News) செய்தியாளர்களும் வந்திருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள கீழானூர் கிராமத்தைச் சென்றடைவதற்குக் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது தேவையென தினமணிச் செய்தியாளர் ஏற்கனவே கூறியிருந்தார்.

மினிபஸ்ஸில் இருந்த தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்த்தவாறு ஊடகவியலாளர்கள் வந்த போதிலும், தமிழகத்தின் இயற்கைக் காட்சிகளை இரசிப்பதில் நான் கண்ணும் கருத்துமாக இருந்தேன்.

திருவள்ளூர் மாவட்டத்திற்குப் பூந்தமல்லி ஹைய் றோட்டே பிரதான பாதை.

மினிபஸ் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. காலைப் பொழுதின் இனிமைகள் என் இதயத்தைக் குளிர்மைப் படுத்தின. இடையிடையே மினிபஸ்ஸுக்குள் தரப்பட்ட சிற்றுண்டிகள் வாய்க்கு இனிமை தர மகிழ்வான பயணமாக அது அமைந்திருந்தது. பூந்தமல்லியை அடைந்ததும் காலை உணவுக்காக மினிபஸ் நிறுத்தப்பட்டது.

## தமிழகத்துக் காலை உணவு

பூந்தமல்லியிலுள்ள தரமான உணவு விடுதியொன்றுக்குக் காலை உணவுக்காக அழைத்துச் சென்றனர்.

தமிழகத்தில் காலை, இரவு ஆகிய இருவேளைகளிலும் இட்லி, தோசை, ஊத்தாப்பம், பரோட்டா (உறொட்டி) என்பனவே உணவாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இடியப்பம், பிட்டு என்பவற்றை மருந்திற்கும் காணமுடியாது.

பூந்தமல்லியிலாவது இடியப்பம் கிடைக்குமென எதிர்பார்த்தேன். இல்லவேயில்லை. ஒரு தட்டில் இட்லி வைத்தார்கள்.

கூடவே சட்னி, அளவாகச் சாப்பிட்டு விட்டு மினிபஸ்ஸில் ஏறிக்கொண்டேன்.

காலை உணவு உண்ட உஷாரில் மினிபஸ் சாரதி உற்சாகமானார்.

சாரதியின் வேகம் கீழானூரின் தூரத்தைக் குறைத்துக் கொண்டது.

மிகவும் பின்தங்கிய இடம், தாரைக் காணாத வீதி, பட்டணத்தில் ஓடித் திரிந்த மினிபஸ்ஸுக்கும் அந்த வீதியில் இறங்குவதற்கு மனமில்லாது முகத்தைச் சுழிப்பது போல நளினத்துடன் கீழானூர் வீதியில் இறங்கியது.

வீதி ஓரங்களில் நின்ற முள்பற்றைகள், சந்தியில் நின்று இளம் பெண்களுடன் சேட்டை விடும் விடலைகளைப் போல நளினத்துடன் செல்லும் மினிபஸ்ஸில் மெல்ல தொட்டு - கீறி, சேட்டைவிட்டன.

கீழானூர் மிகவும் பின்தங்கிய கிராமமாக இருந்தாலும் இந்துப் பண்பாட்டின் காலத்து பழைய கல் வீடுகள் இரண்டு இருந்தமை எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அதில் ஒரு வீட்டிலேயே, கணனிப் பயிற்சி மையம் ஆரம்பிக்க ஏற்பாடாகியிருந்தது. பழனிச் செட்டியாரின் வீடு அது.

வீட்டின் முகப்புக் கதவில் இலட்சுமி உருவம். நிலையில் குடையப்பட்ட இடத்தில், காமாட்சி விளக்கு வைக்கப்பட்டிருந்தது.

பலகையினால் அமைக்கப்பட்ட மாடியில் புதிய கணனிப்பயிற்சி நிலையம். ஊடகவியலாளர்கள் கணனிப் பயிற்சி மையத்தை சூழ்ந்து கொண்டு தமது கமராக்களில் பதிவு செய்து கொண்டனர்.

கிழானூரைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவரே கணனிப்பயிற்சி நிலையத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

அடிப்படை வசதிகளற்ற ஓர் பின் தங்கிய கிராமத்தில் கணனியை அறிமுகம் செய்வது உண்மையில் மகிழ்வுக்குரிய விடயமே.

எனினும், அந்த நிகழ்வில் அக்கிராமத்தைச் சேர்ந்த சில இளைஞர், யுவதிகளே கலந்துகொண்டனர்.

கிராமிய இளைஞர், யுவதிகளுக்கான கணனிப் பயிற்சி நிலையம் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதற்காக லேசான் இந்திய நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. பிரதீப் தலைமையில் செய்தியாளர் மாநாடும் அதே வீட்டில் நடந்தது. (வளரும்)



கீழானூரில் செய்தியாளர் மாநாடு

## கிராமத்தில் கணனி அறிமுகம்



தினமணிச் செய்தியாளர் கணனி நிலையம் பற்றி வினவுகிறார்

**என். விஜயன்**

---

## மூவினக் கலைஞர்களைக் கொண்டு ஊர்வலம் நடத்தி பெருமை கொண்டது திருமறைக் கலாமன்றம்

(கொழும்புத்துறை)

40 வருடங்கள் கலைப்பணியாற்றும் திருமறைக் கலாமன்றம் மகத்தான சாதனைகள் படைத்துள்ளது. இவ்வாறு தெரிவித்தார் திருகோணமலை நீதிபதியும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா.

கடந்த 2 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற 'நாடக மாலை' நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகைதந்த அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பூங்குன்றனாரின் கூற்றிற்கு சான்று பகரும் வகையில் அருட்தந்தை மரியசேவியரின் கலைப் பணிகள் இருக்கின்றது.

அனைத்து மதத்திற்கும் உள்ள அடிப்படைத் தத்துவம் எதுவோ அதனையே பின்பற்றிப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடக்க முன்னரே மூவின கலைஞர்கள் 1500 பேரைக் கொண்டு கலை ஊர்வலம் நடத்தினார்கள் திருமறைக் கலாமன்றத்தினர். அதன் பின்பே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நாடகக் கலையை வளர்ப்பது என பது கடினமான காரியம். நாடகத்தை வடிவமைத்து அதற்கு நடிகர்களைத் தெரிவு செய்வது மிகவும் கடினமான காரியம். நடிக்க முடியாதவர்களின் நடிப்பாற்றலை வெளிக் கொணர்வதில் மரியசேவியரைத தவிரவேறு யாரும் இருக்க முடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழிற்கு மட்டுமல்ல சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களின் அந்தந்த மதங்களின் கலைத்துவங்களையும் வெளிக்கொணர்ந்து கலைப்பாலம், உறவுப்பாலம் அமைத்துப் பணியாற்றியிருக்கின்றார் என்றால் அவருக்கு யேசுவின் அருள் நிறைந்திருக்கின்றது.

அதோடு இலங்கையில் 20ற்கும் அதிகமான இடங்களில் சிங்கள, தமிழ் மக்களிற்கு மத்தியில் திருமறைக் கலாமன்றம் கிளை பரப்பியுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் காலூன்றியிருக்கின்றனர் என்பதை நான் அறிந்திருக்கின்றேன் என்றார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் ஏ.எம்.செபஸ்ரியாம்பிள்ளை, டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் ஆகியோரும் கலந்துகொண்டனர். அதோடு ஞான சவுந்தரி இசை நாடகமும் 'மீண்டும் எழுவோம்' நவீன நாடகமும் சொல் ஈனுங்கொற்றம் என்ற கூத்துருவ நாடகமும் இடம்பெற்றன. (அ-51)

## அதிகூடிய மின் கட்டணம் அறவிடும் நாடு இலங்கை நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சங்கடம்

(கொழும்பு)

உலகில் உச்சக்கட்ட மின் கட்டணத்தை அறவிடும் நாடு இலங்கை என்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் ஒப்பிடுகையில் ஒரு யுனிட் மின்சாரத்திற்கு 2 மடங்கு அதிகமான கட்டணம் இலங்கையில் அறவிடப்படுகிறது.

உளநாட்டு இறைவரித் திணைக்களத்தின் கண்டிக் கிளைக் கட்டடத் திறப்புவிழாவில் பங்குபற்றி உரை நிகழ்த்துகையில், இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் பல்வேறு தடைகள் இதற்கு எதிராக ஏற்பட்டுள்ளன என்றும்,

14 ஆயிரம் இலங்கை மின்சார சபை ஊழியர்களின் நன்மை கருதி நாட்டு மக்கள் மீது கஷ்டங்களை சுமத்தும் நடவடிக்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுக்காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 17 நாட்கள் நடைபெற்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். பிரதம குருவாக கலாநிதி சிவஸ்ரீ து.ஜெகதீஸ்வரக்குருக்கள் சேவையாற்றுவார். (து-29)

# அகவாழ்வை அச்சுறுத்தும் சூழல்

மனிதனுடன் சூழல் நெருங்கிய தொடர்புடையது. சூழலை மனிதன் தனது வாழ்க்கைக்கு ஏற்ப பயன்படுத்த முனைகிறான். இதனால் சூழலில் மாற்றங்களைக் கூட ஏற்படுத்த முனைகிறான். இன்று வைத்தியத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக மனிதனின் சராசரி வாழ்க்கைக்காலம் வளர்ந்த நாடுகளில் 80 வயதாக உள்ளது. இலங்கையில் சராசரி வாழ்க்கைக்காலம் 70 வயதாகும். எனவே வைத்தியத்துறை மனித வாழ்வுக்கு நீடிப்புக் கொடுத்துள்ளது. எனினும் சூழல் தாக்கத்தை ஏற்படுத்த முனைகிறது.

ஆரம்ப மனிதன் வேட்டையாடினான். குழுக்களாக வாழ்ந்தான். அவனது நாடோடி வாழ்க்கை பல நோய்கள் தொற்றக்காரணமாயின. பின் குழுவாக வாழ்ந்த போது ஏனையோரையும் இந்த நோய்கள் தொற்றின. இந்த நோய்கள் வைரசுக்கள், பற்றீரியாக்கள் போன்ற நுண்ணங்கிகளால் தொற்றலாயின. இவற்றின் தாக்கங்களினால் தடிமன், காய்ச்சல், இருமல், கூவைக்கட்டு, சின்னமுத்து, கொப்புளிப்பான், பெரியம்மை ஆகிய வைரசுக்களால் ஏற்படும் நோய்கள் தோன்றின. மேலும் நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றோட்டம், சலரோகம் என்பன பற்றீரியாக்களால் வரும் நோய்களாகும். மேலும் புழுக்களும் நோய்களை உண்டாக்கின. மலேரியாக்காய்ச்சல் ஒட்டுண்ணியால் ஏற்பட்டது. இவையாவும் ஆதிகாலத்தில் சகசமாகவும் பரவலாகவும் காணப்பட்டன. இவற்றிற்கு சுதேச வைத்தியங்கள், மூலிகைகள் என்பன சுகப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

பின்பு மனிதன் நாகரிக வாழ்வுக்கு முன்னேறினான். விவசாயகம் செய்ய நிலத்தைப் பயன்படுத்தினான். காடுகளை அழித்தான். களனிகளாக்கினான். கிணறு வெட்டினான். பயிருக்கு நீர் இறைத்தான். இப்படியாக விவசாய நிலங்களும், குடியிருப்புக்களும் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தின. இதனால் கழிவுப்பொருட்களை அகற்ற வேண்டியதாக இருந்தது. குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட கிணறுகளை அகழவேண்டி ஏற்பட்டது. மக்களும் ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினர். தமது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தினர். இதனால் பரவலாக நாடு விட்டு நாடு தொடர்புகள் ஏற்பட்டன. எனவே முன்பு ஒரு குழுக்களிடையே ஏற்பட்ட தொற்றுநோய்கள், நாடு விட்டு நாடு பரவத்தொடங்கின. திரைகடல் ஓடியும் திரவியம் தேடமுற்பட்ட மனிதனை நோயும் பின் தொடர்ந்தது. ஐரோப்பியர் தான் அமெரிக்கக் கண்டத்தினுள் பெரியம்மை, கொப்புளிப்பான், சின்னமுத்து, வாந்திபேதி, நெருப்புக்காச்சல் முதலிய நோய்க்கிருமிகளை தம்முடன் கொண்டு சென்று நோய்களைப் பரவச் செய்தனர். அமரிக்கர்களில் பலர் இவ்வித தொற்றநோய்களால் அழியலாயினர்.

ஐரோப்பாவில் ஆரம்பத்தில் இடம்பெற்ற பிளேக் நோய் எலிகளில் உள்ள உண்ணிகளில் வாழும் ஒரு வகை நுண்ணங்கியால் ஏற்பட்டது. எலிகள் பெருக நோயும் பெருகின. இந்தநோய் வீடுவீடாகக் கொண்டு செல்லப்பட்டது. 1347 ஆம் ஆண்டு இந்த நோயினால் ஐரோப்பா, பிரித்தானிய நாடுகளில் இரண்டரை கோடி மக்கள் இறந்தனர்.

பிரித்தானியாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சி பின்பு ஏனைய நாடுகளுக்கும் பரவியது. இதனால் மனித இனப்பெருக்கம், சுகாதார முன்னேற்றம், போஷாக்குச்சக்தி அதிகரிப்பு, வைத்தியத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டன. நோய் பரவாமல் தடுக்கும் மருந்துகள் குணப்படுத்தக்கூடிய மருந்துகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டு நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. சனத்தொகை அதிகரிப்பும் ஏற்பட்டது. மேலும் மக்களின் வாழ்க்கைக்காலமும் நீண்டது.

### தேங்கி நிற்கும் நீர் உருவாக்கும் நுளம்பு

இலங்கையில் நீர்மூலம் வயிற்றோட்டம் வாந்திபேதி என்பன ஏற்படுவதைக் காணலாம். சிலர் இவற்றால் இறந்துமுளர். மேலும் சுத்தமற்ற முறையில் உணவு உட்கொள்ளுதல், கழிப்பிட வசதிகளின்மை என்பனவும் இதற்கான முக்கிய காரணங்களாம். மேலும் இலங்கையில் காவிகளால் பரவும் மலேரியா, டெங்குக்காய்ச்சல், மூளைக்காய்ச்சல் என்பன ஏற்படுகின்றன. அனோபிளஸ் ஸ்பெக்ரஸ் நுளம்பினால் மலேரியா பரவலாக ஏற்படுகிறது. எமது சூழலைச் சுத்தமாக வைத்திருந்தால் மலேரியா, மூளைக்காய்ச்சலிலிருந்து பாதுகாக்க முடியும்.

மலேரியாக்காய்ச்சலைத் தோற்றுவிக்கும் அனோபிளஸ் ஸ்பெக்ரஸ் நுளம்பு நீரில் முட்டையிட்டுப் பெருகும். எனவே நீரைத்தேங்கி நிற்க விடக்கூடாது. மேலும் நீரில் வளரும் குடம்பிகளை அழிக்க வேண்டும். D.D.T மூலம் முன்பு நுளம்பு கொல்லப்பட்டது. எதற்கும் நீர்தேங்கி நிற்க இடமளிக்கக் கூடாது. விரும்பினால் நீர்தேங்கிய பகுதிகளில் மீன் வளர்க்கலாம்.

டெங்குக்காய்ச்சல் ஏடிஸ் ஏஜிட்டி என்ற நுளம்பினத்தால் பரப்பப்படுகின்றது. ஆனால் இந்த நுளம்பு துப்பரவான நீரில் முட்டையிடும். நாம் எறியும் சிரட்டைகள், பேணிகள், போத்தல்கள் போன்றவற்றில் சொற்ப நீர் இருப்பினும் இந்த இனம் பெருகப் போதுமானது. மழை பெய்ததும் நீர்ப்பாத்திரங்களை வெளியிலிருந்து அகற்ற வேண்டும். நீர் நிரம்பாது பாதுகாக்க வேண்டும். இந்தப் பாத்திரங்களை வெளியான இடங்களிலிருந்து அகற்றுவதால் இந்த நுளம்பு இனப்பெருக்கத்தை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

யானைக்கால்நோய் என்பது கியுலெக்குயின் குவிபாசியாற்றல் என்ற நுளம்பின் தாக்கத்தினால் பரவுகிறது. இந்த நுளம்பானது அழுக்கான, சுத்தமற்ற நீரில் முட்டையிடுகிறது. இலங்கையின் தலைநகரமான கொழும்பில் அழுக்கடைந்த கால்வாய்கள் கழிவுநீர் கால்வாய்கள் என்பவற்றில் இந்த இனம் பெருக வாய்ப்புண்டு. கொழும்பு சார்ந்த பகுதிகளில் யானைக்கால்நோய் ஏற்பட்டுள்ளதை நாம் காணலாம். இதனால் இந்த யானைக்கால்நோய் உள்ள பகுதியிலுள்ளவர்கள் தமது இரத்தத்தை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும். இந்த நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் கட்டுப்படுத்த முடியும்.

### ஊர்ந்து செல்லும் வாகனங்கள் கக்கிச் செல்லும் புகை

மேலும் காற்றில் ஏற்படும் புகையும் மாசு விளைவிக்கின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, மேட்டார் வாகன புகை, பெற்றோல், நிலக்கரிப்பொருட்களிலிருந்து வரும் புகை என்பன வளி மண்டலத்தில் பரவி வளியை மாசடையச் செய்கின்றன. தூசி, வாயுக்கள், புகை முதலியன கூட குறிப்பிட்ட அளவிலும் பார்க்கக் கூட இருக்கும் போதும் வளி மண்டலம் மாசடைகிறது. வாயுக்கள் கூட குறிப்பிட்ட அளவிலும் அதிகமாக இருப்பின் வளிமாசடையலாம். காபனீரொட்சைட்டின் செறிவு கூடுமாயின் இது சூழலை பாதிக்கும். பெற்றோலிய பொருட்களும் நிலக்கரியும் எரிக்கப்பட்டு காபனீரொட்சைட், சல்பர் ஒட்சைட், ஐதரோகாபன்கள் நேரடியாக வளியைச்சென்றடைகின்றன. சல்பர் ஒட்சைட்டுக்கள் வளியிலுள்ள நீராவியுடன் தாக்கப்பட்டு அமிலங்களை உருவாக்கி' அமில மழைக்குக் காரணமாகிறது. வளியை மாசுபடுத்தும் மாசாக்கிகள் வாயுக்களாகவும் துணிக்கைகளாகவும் காணப்படலாம். வாயு மாசாக்கிகள் என்பன காபனீரொட்சைட், சல்பர்ஒட்சைட், நைதரசன் ஒட்சைட், மீதென் என்பனவாம். துணிக்கைகளாக தூசி, புகை, பனிப்படலம் என்பன அடங்கும்.

### தொழிற்சாலையில் தோன்றும் தூசி

மேலும் இலங்கையில் சீமெந்துத்தொழிற்சாலைகளில் கிளம்பும் தூசி, கருங்கல் உடைக்கும் பகுதிகளில் தோன்றும் தூசி, புகை, மரத்தூள்கள் என்பனவும் வளியை மாசுபடுத்துகின்றன. வளியிலுள்ள நீராவி உறையும் போது பனிப்படலம் தோன்றும். மின் உற்பத்தி நிலையங்கள் வளியை மிகவும் பாதிக்கின்றன. வெப்ப மின்நிலையங்களில் பெற்றோல் நிலக்கரி என்பன பெருமளவு எரிக்கப்படுவதால் காபனீரொட்சைட், காபனோரொட்சைட், சல்பர் ஒட்சைட் என்ற வாயு மாசாக்கிகளும், சாம்பர், புகை முதலிய துணிக்கைமாசாக்கிகளும் வளிக்குள் செல்கின்றன. போக்குவரத்து வாகனங்களும், மோட்டார் சாதனங்களும் மாசாக்கிளை வளியினுள் விடுகின்றன.

கைத்தொழிற்சாலைகளில் வெளிவரும் மாசாக்கிகள் சூழவுள்ள பகுதிகளைப் பாதிக்கும். பலத்த காற்றடிக்கும் போது மாசாக்கிகள் காற்றால் எடுத்துச்செல்லப்பட்டு பரவலடைகின்றன. புத்தளம் சீமெந்து தொழிற்சாலைகளைச் சூழவுள்ள பகுதியில் சீமெந்துத் தூசிப்படிவுகள் இன்றும் காணப்படுகின்றன. 1948 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் படிந்த புகை மண்டலம் 20 பேரை கொன்றது. அங்கு வாழ்ந்த 14000 பேர் நோயுற்றனர். 1958 இல் இலண்டனில் வளி மாசடைந்ததால் 5 நாட்களில் 400 பேர் இறந்தனர். இந்தியாவில் போபால்நகரில் பு,ச்சிகொல்லி உற்பத்தித் தொழிற்சாலையிலிருந்து நச்சு வாயு வெளியேறியதால் பலர் இறந்தனர். 5000 பேர் பாதிக்கப்பட்டனர்.

வளியானது அதிகளவு மாசடைந்த பகுதிகளில் இறப்பு வீதம் அதிகரித்தும், குழந்தைகள் வயோதிபர் பாதிக்கப்பட்டும், சுவாசத்தொகுதிகளின் பாதிப்பினாலும் மக்கள் அவதியுறுவர். இன்று காபனீரொட்சைட் முக்கிய மாசாக்கியாகும். காபனீரொட்சைட் இரத்தத்திலுள்ள ஈமாகுளோபினுடன் சேர்கிறது. ஈமோகுளோபின் ஒட்சிசனை சுவாசப்பையிலிருந்து எடுத்து உடலின் கலங்களுக்குக் கொண்டு செல்கிறது. இதனால் காபனீரொட்சைட்டு சேர்வதால் கலங்களுக்குக் கொண்டு செல்லப்படும், ஒட்சிசனின் கணியம் குறைகிறது. காபனீரொட்சைட்டின் செறிவு அதிகமுள்ள காற்றை நீண்ட நேரம் சுவாசித்தால் மரணம் கூட ஏற்படும். கொழும்பில் இருந்து காலி நோக்கிப் போகும் போது வளியிற் காபனீரோட்சைட்டின் தாக்கத்தை நாம் உணர முடியும்.

இன்று கரியமில வாயுவின் செறிவானது வளி மண்டலத்தில் மிக உயர்ந்து காணப்படுகிறது. இந்த கரியமில வாயுவின் அதிகரிப்பு கைத்தொழில் புரட்சியின் பின்பே மிக அதிகமாக உள்ளது. 1997 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தினர் இரண்டு சதம பாகைக்கு மேல் வளி மண்டலத்தில் வெப்பநிலையை உயரவிடக்கூடாது என அறிவுறுத்தினர். மேலும் கரியமில வாயுவின் செறிவை ஒரு மில்லியனில் 550 பங்குகளுக்கு கீழே குறைக்க வேண்டும் எனவும் கூறினார். இப்படி கரியமில வாயுவின் செறிவைக் குறைத்தால் வளி மண்டல வெப்பநிலை இரண்டு சதம பாகைக்குக் கீழே குறைவாகும். எனவே கரியமிலவாயுவின் செறிவைக் குறைத்தால் தான் சூழல் பாதுகாக்கப்படும். இன்றேல் கரியமில வாயு எம்மை அச்சுறுத்துவதாக இருக்கும். இதிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

மேலும் பல நோய்க்கிருமிகளும் எமது உடல் நலத்தைப் பாதிக்கின்றன. வாந்திபேதியை வைபிரியோ கொலேரா என்னும் கிருமியும, நெருப்புக்காய்ச்சலை சல்மொனேலாறைப்பி என்னும் கிருமியும் வயிற்றுளைச்சலை சிஜேலாடிசன்றிய என்னும் கிருமியும் வயிற்றோட்டத்தை எஸ்கெக்கியாகோலி என்னும் கிருமியும் பரப்புகின்றன. இவை யாவும் நீர்மூலம் பரப்பப்படும் பற்றீரியாக்களாகும். இத்தகைய நோய்க்கிருமிகள் பெரும்பாலும் வாய்மூலம் உடலுள் சென்று குடலையடைந்து பின்மலத்துடன் செல்கின்றன. மலமானது நீரிலும் உணவிலும் கலக்க நேரிடின் நோய் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. எனவே நீரை கொதிக்க வைத்து, வடிகட்டிக் குடிக்கவேண்டும்.

### பாதுகாப்பற்ற பூச்சிகொல்லி தெளிக்கும் முறை

பூச்சி கொல்லிகளின் நச்சுப்பதார்த்தங்களும் வளியில் சென்றடைகின்றன. இவை காய்கறிகள், விலங்குகள் மூலம் மனிதனுட் சேர்கின்றன. காய்கறிகளைப் பழுதாகாமல் பாதுகாத்து வைக்கவும் பூ,ச்சிகொல்லிகளைப் பாவிக்கின்றனர். எனவே காய்கறிகளை நன்றாகக் கழுவி பாத்திரங்களிலிட்டு சமையல் செய்வது நல்லது. மேலும் பு,ச்சிகொல்லிகள் தற்கொலைகளுக்குக் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. 'இலங்கையில் 70 சதவீதமான தற்கொலைகள் பு,ச்சிகொல்லிகளை உட்கொண்டு ஏற்பட்டவையாம். எனவே தற்கொலை முயற்சியிலீடுபடுபவர்களை உளவியல் ரீதியாக ஆலோசனை கூறித் தவிர்க்க முனைய வேண்டும். மேலும் பூ,ச்சி கொல்லிகள் தெளிக்கும் போதும் பலர் தாக்கப்படுகின்றனர். எனவே உரிய பாதுகாப்புடன் பூ,ச்சிகொல்லிகளைத் தெளிக்குமுறப்ப வேண்டும்.

இரசாயனப்பதார்த்தங்களும் எமது உடலைப் பாதிக்கின்றன. பெரும்பாலும் புற்றுநோயை இவை தோற்றுவிக்கின்றன. நிலக்கரியிலிருந்து தார் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே தார் உற்பத்தி செய்யும் இடங்களில் வேலை செய்வோரில் தார் படுவதனால் தோற்புற்றுநோய் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே தாரைப்பயன்படுத்துவோர் பாதுகாப்புக்கவசங்களை அணிந்து பயன்படுத்த வேண்டும். சாயம் பு,சுதல், ரேடியம், ஆசணிக்கு அஸ்பெஸ்டஸ் போன்றவையும் புற்றுநோயை ஏற்படுத்துபவை. அஸ்பெஸ்டஸ் பாவிக்கும் கட்டடங்களில் வேலை செய்வோர் சுவாசப்புற்றுநோயால் பாதிக்கப்படுவர். நைதரேற்றுப் பசளைகளைப் பாவிக்கும்போதும் அவை கரைந்து நீர்த்தேக்கங்களை, நிலக்கீழ் நீர் என்பவற்றைப் பாதிக்கின்றன. நைதரேற்றுகளும் புற்றுநோயை ஏற்படுத்தவல்லன. எனவே இப்படியாக இரசாயனப் பதார்த்தங்களை பாவிக்கும் போது எமது உடல்நிலை பாதிக்காதவீாறு எம்மைப் பாதுகாக்க கவசங்கள் போன்றவற்றை பாவிக்கவேண்டும். சட்டவிரோதமாக இலங்கையில் போமலின் என்னும் இரசாயனப் பொருள் மீன் உணவுப் பாதுகாப்பில் பயன்படுத்தப்படுகிறது. இந்த போமலினை உட்கொண்டால் குடல்நோய், வாந்திபேதி, கல்லீரல் பாதிப்பு என்பன ஏற்படும். நுளம்பை அகற்றப்பயன்படுத்தப்படும் மலத்தியேன் மனித உடலின் மைய நரம்பு மண்டலத்தை தாக்கி தசைநார்களையும், தன்னியக்க உறுப்புக்களையும் பாதிக்கிறது. எனவே இவற்றை நாம் தவிர்க்க வேண்டும். நுளம்புக்காக நுளம்பு வலைகளைப் பாவிக்கலாம்.

வளிமாசடைவதைத் தடுப்பது மிகக் கஷ்டமான விடயம். மனிதன் பாவிக்கும் சக்தி உற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழில், விவசாய உற்பத்திகள் என்பன வளியை மாசுபடவே செய்கின்றன. எனவே அச்சுறுத்தும் சூழலில் சகல நடவடிக்கைகளிலும் மக்கள் கவனமாக இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மனிதன் தன்னைப் பற்றிய சிந்தனையுடன் தன்பாதுகாப்பைத் தானே உறுதிப்படுத்த வேண்டும். மனிதர்கள் சூழலைத் தாக்குகின்றனர். சூழல் மனிதனைத் தாக்குகின்றது வெல்வது யார்? மனிதனாக இருக்க வேண்டும். எனவே மனிதன் சூழலில் சுகாதார ரீதியாக சுகதேகியாக சுகவாழ்வு வாழ சகல வழிகளும் செய்யப்படவேண்டும். □

சொ. அமிர்தலிங்கம் B.A(Hons),
ஆளுநரின் செயலாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம்
திருகோணமலை

# மகளிர் உலகம்

## சுத்தம் பேணுங்கள்



ஒருவர் அளிக்கும் தோற்றம் மிகவுயர்வான தூய்மையையும், உடல் ரீதியான தயார் நிலையையும் முன்னெடுக்க உதவும். ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள அல்லது சுத்தமின்றி இருபபவர்கள் உணவைக் கையாளுதல் ஆகாது. ஒருவரின் உடலில் அல்லது வெளிபுறத்தில் ஏதேனும் கிருமிகள் அல்லது நுண்ணங்கிகள் இருப்பின் அவை உணவில் தாவிவிடும். எனவேதான் தனநபர் சுத்தம் பேணுதல் மிகவும் அவசியமாகும்.

தினமும் குளிப்பதோடு நகங்கள், மூக்கு, செவிகள், தலைமயிர், வாய், பற்கள் என்பவற்றை எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அழகுசாதனப் பொருட்களைக் குறைந்தளவிலேயே பயன்படுத்தல் வேண்டும். சுத்தமான ஆடைகளை அணிய வேணடும். வெட்டுக்காயங்கள, புண்கள் மீது கவனம் தேவை.

சமையலறையின் ஏதேனும் பகுதிகளையோ உபகரணங்களையோ, சுத்தம் செய்யாது வைத்திருத்தல் அல்லது கவனிக்காது விட்டுவிடுதல் உணவில் தொற்று ஏற்படுவதற்கு காரணமாக அமையலாம். இதனால் சமையலறைச் சுகாதாரம் அவசியமானது.

*உணவு சுத்தமாகவும பாதுகாப்புடன் பேணப்படுவதாகவும் இருத்தல் வேண்டும் என்பதை உணவைக் கையாளும் ஒவ்வொருவரும் நன்கு அறிந்திருப்பது முக்கியமானதாகும்.

*உணவுடன் சம்பந்தப்பட்டவர்கள் உணவுப் பொருட்கள் ஒனறுடன் ஒன்று கலக்கப்படுவது, மாசுபடுவது என்பவறறைத் தடுப்பதல் கவனத்துடன் செயற்படுதல் வேண்டும். நுண்ணங்கிகள், கிருமிகள் பெருக்கமடைவதைத் தடுத்தல் அவசியம்.

* உணவைக் கையாள்பவர்கள் உணவில் சுகாதாரம் பேணும் விதிகளை நன்கு அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் சுகாதாரப் பழக்கவழக்கங்களை எந்நேரமும் கடைப்பிடித்தல் வேண்டும்.

## சமைத்துச் சுவைப்போம்

### பிரட் கொழுக்கட்டை

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பாண் | – 5 துண்டுகள் |
| தேங்காய்த் துருவல் | – 1கப் |
| சீனி | – 100g |
| ஏலக்காய் | – 5 |
| நெய் | – 1 தே.கரண்டி |
| வெண்ணெய் | – 1 கரண்டி |

***செய்முறை:***

பாணைச் சுற்றி உள்ள சிவந்த பகுதியை நீக்கி விட்டு பாணைத் துண்டுகளாக வெட்டி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். 1 தே.கரண்டி நெய்யில் சீனி, ஏலக்காய்த் துள், தேங்காய்த் துருவலைக் கிளறி வைத்துக் கொள்ளவேண்டும். தேவையானால் சிறிதளவு நீர் சேர்த்துக் கிளறலாம்.

பின் பாண் துண்டுகளை நீரில் நனைத்து பிழிந்து ஒவ்வொரு துண்டிலும் ஒரு தே.கரண்டி தேங்காய்ப்பூ கலவையை நடுவில் வைத்து அழுத்தி மூடவேண்டும்.

விரிசல் இல்லாமல் அழுத்திமூட வேண்டும். இது பார்க்க முத்துச் சிப்பி போல் இருக்கும். அந்தப் பாண் துண்டுகளை ஆவியல் வேகவைத்து எடுத்து அதன் மீது சுடச்சுட வெண்ணெயைத் தடவி ஒன்றின் மீது ஒன்றாக ஒட்டாமல் தனித்தனியாக வைத்து ஆற விடவேண்டும். இப்போது பிரட் கொழுக்கட்டை தயார்.

## குறை எடை குழந்தைகளுக்கு மன அழுத்தம் வரும்...!



குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகள் பின்னாளில் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவார்கள் என்று மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர். இன்குபேட்டர் கருவிக்குள குறைப்பிரசவ குழந்தைகள் இருக்கும்போது. அதுவே மன அழுத்த பாதிப்புக்கு கொண்டு சென்றுவிடும்.

முழுமையான கர்ப்பகாலத்தில் பிறக்கும் குழந்தை 3.5 கிலா எடை இருக்கும். இதில் 25 சதவீதம் தலை சார்ந்து இருக்கும். கர்ப்பத்தின் ஆரம்ப மாதங்களில் கருவின் மூளை வளர்ச்சி படு வேகமாக இருக்கும். ஆனால் கர்பபத்தின் பின் பகுதியில் இந்த வேகம் தணிந்துவிடும். அதே சமயம் உடலின் மற்ற பகுதிகள் வேகமாக வளரும். குறைப்பிரசவ குழந்தைகள் உயிரிழப்பதற்குக் காரணமான விஷயங்களில் மனநலப் பாதிப்புகள் முக்கிய இடம் வகிக்கிறது.

2.5 கிலோவுக்கு குறைவான எடையில் பிறக்கும் குழந்தைகளில் 50 சதவீதம் பேருக்கு வாழ்க்கையின் பின்னாளில் உளவியல் பாதிப்புகள் உண்டாவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. எனினும் மன அழுத்தம் என்பது பல்வேறு காரணங்களினால் உண்டாகும் விஷயம். இதில் குறை எடை என்பது அவற்றில் ஒரு காரணம் மட்டுமே.

## பூக்களும் நாமும்



பூ, அல்லது மலர்களைப் பற்றிக் கூறாத கவிதையுண்டா? பாடல் உண்டா? அல்லது இடமுண்டா? இயற்கையளித்த பல உன்னத அழகான பொருட்களில் மலர்களே தலையானது என்றால் மறுப்பவர் உண்டோ? பெரும்பாலான நிகழ்ச்சிகள், வைபவங்களுக்கு ஒரு தனிச் சிறப்பைத் தருவது மலர்கள்தான்.

ஆனால் தற்போது உண்மையான மலர்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் காகிதம், பட்டு அல்லது சில்க் வகை



துணிகளால் செய்யப்பட்ட பூக்கள் விற்பனையிலும் பயன்பாட்டிலும் அமோகமாக உள்ளன. உண்மையான மலர்களோ, சில்க் வகை பூக்களோ, ஒவ்வொரு விதத்தில் நன்மை பயக்கக் கூடியவையாகும்.

**'சில்க்' மலர்கள்:**

என்றென்றும் அதன் தன்மை மாறாமல் இருக்கும், காய்ந்து போகாது, உதிராது, பழுப்பு வணணமாகாது.

உண்மையான மலர்களின் விலையைக் காட்டிலும் குறைவாக இருக்கும்.

எடை குறைவாக இருக்கும்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மாற்றவும் எடுத்து செல்லவும் சுலபம்.

நிகழ்ச்சிக்கு 1 வாரம் அல்லது சில வாரங்களுக்கு முன் பாகவே வாங்கி வைத்துக்



கொள்ளலாம்.

அலர்ஜியை ஏற்படுத்தாது.

பூச்சித் தொல்லை இருக்காது.

**நிஜப் பூக்கள்:**

இயற்கையான நறுமணம் கொண்டவை.

மென்மையானவை.

கூடுதல் எழில் கொண் டவை.

பல வண்ணங்கள், பலவகை கொண்டவை.

புகைப்படம் எடுப்பதற்கு உகந்தவை (இயற்கையாக இருக்கும்).

இவ்வாறு இவ்விரு வகை மலர்களும் பல சிறப்புக்களை கொண்டிருக்கின்றன. ஒரு நிகழ்ச்சி, சூழ்நிலை மற்றும் சம்பந்தப்பட்ட நபரின்



விருப்பத்திற்கேற்பவோ சௌகரியத்திற்கு ஏற்பவோ சில்க் அல்லது நிஜ மலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. எந்த வகை மலர்கள் வாங்குகிறோம என்பது முக்கியமல்ல. சம்பந்தப்பட்ட நிகழ்வையும் மன மகிழ்வையும் அம்மலர்கள் பிரதிபலிப்பதே மிகவும் முக்கியம், அவசியம்.

## பெண்கள் எப்போதும் இளமையாக இருக்கலாம்



இளம் பெண்கள் பலர் இப்போதெல்லாம் மிகவும் வயதானவர்களைப் போல் ஆகிவிடுகிறார்கள். பிள்ளைகளை அடிக்கடி பெறுவதால் வயதான தோற்றம் வந்துவிடுகிறது என்று நினைககிறார்கள்.

பிள்ளைகளைப் பெறுவதால் மட்டும் வயதான தோற்றம் அடைவதில்லை. பிள்ளைப் பேறு காலத்தில் இவர்கள் மனதில் ஒரு வகை பயமும் பீதியும் ஏற்படுகிறது. இதனால் விரைவிலேயே இவர்கள் முதுமையடையத் தொடங்கி விடுகிறார்கள்.

மூளை பாதிக்கப்படுவதால் உடலின் தோற்றம் பெரிதும் மாறி விடுகிறது. மனக்கவலை இல்லாமல் ஒரு பெண் எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் வயதான தோற்றத்தை அடைவதில்லை.

## வீட்டுக் குறிப்புகள்

* பலமுள்ள ரப்பர் பாண்ட்கள் தேவைப்பட்டால், தேவையற்ற சைக்கிள் டியூபை சுருட்டி வைத்துக்கொள்ளுங்கள்.

*மெழுகுதிரியில் இருந்து உருகும் மெழுகை சேர்த்து வைத்துக்கொண்டு அதை ஒரு பொலித்தீன் பைக்குள் போட்டு சுடுநீரின் மேற்பகுதியில் வைத்துப் பிழியுங்கள். மெழுகு உருகும். அதில் திரியை இணைத்து தேவைப்படும் போது மெழுகுவர்த்தியாக உபயோகித்துக் கொள்ளலாம்.

* செலோடேப்பை பிரிஜ்ஜில் சிறிது நேரம் வைத்தால் அதனை எளிதாகப் பிரித்தெடுக்கலாம்.

* சோப் வெட்டும் கத்தியை சிறிது நேரம் சுடுநீரில் போட்டு விட்டு பின்பு சோப்பை நறுக்கினால் எளிதாக வெட்டி விடலாம்.

* போத்தல் மூடி திறக்க முடியாத அளவுக்கு இறுக்கமாக இருந்தால் சுடுநீரில் அமிழ்த்தெடுத்த துணியை மூடிப் பகுதியில் சிறிது நேரம் இறுகக் கட்டி வைக்கவும். பின்பு மூடியின் மேல்ப் பகுதியில் குளிர்ந்த தண்ணீரை ஊற்றுங்கள். பின்பு எளிதாக மூடியை கழற்றிவிட முடியும்.

*பூண்டு, வெங்காயம், மீன் போன்றவைகளை நறுக்கிவிட்டு கையில் சிறிதளவு உப்பைத் தேய்த்து சோப் போட்டு கழுவினால் வாடை வீசாது.

* பால் கொதிக்க வைத்த பாத்திரத்தை 15 நிமிடம் தண்ணீரில் ஊற வைத்து விட்டு கழுவுங்கள். சுத்தமாகிவிடும்.

* கோடை காலத்தில் குளிர்ந்த நீரில் முட்டைகளைப் போட்டு வைத்தால் 10 நாட்கள் வரை பழுதாகாமல் இருக்கும்.

* தோசைமாவில் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தூள் சேருங்கள். தோசை மொறுமொறுப்பாக இருக்கும்.

# சீதனக் கொடுமையால்

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு” என்று பெருமையுடன் பேசும் தமிழ் நாட்டில் வாழும் தமிழர்கள் மட்டும்தான் திருமணப் பத்திரிகையில் “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” என்ற திருக்குறளை அச்சிடுகிறார்கள். ஆன்றோர்கள், சான்றோர்கள் வாழ்த்த மங்கள மேளம் முழங்க அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அக்கினி சாட்சியாக நடப்பதுதான் திருமணங்கள். இந்தத் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றது என்று சொல்வார்கள். ஆனால் பலபேருக்கு வரதட்சணையால்-சீதனத்தால்தான் நிச்சயிக்கப்படுகிறது. நிச்சயதார்த்தம் எனும் மாட்டுச் சந்தையிலும் பெண்ணை விலை பேசுகிறார்கள். பேராசை கொண்ட பல மாமனார் மாமியார்கள்.இன்றும் நீதி மன்றங்களுக்கு வரும் வழக்குகளிலே பெரும்பாலானவை வரதட்சணைக் கொடுமை விவாகரத்துத்தான். இந்த வரிசையிலே இப்பொழுது மீண்டும் ஒரு பெண் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவாதான் டாக்டர் அனு காயத்திரி.

திருமணமான ஒரே ஆண்டில் வெளியே துரத்தப்பட்டிருக்கிறாா அனு காயத்திரி. வரதட்சணையாக ஒருகிலோ தங்கமும் ஒரு காரும் கொடுத்து, 10இலட்சம் ரூபா செலவு செய்து திருமணத்தை நடத்தியும் மேலும் 19இலட்சம் கொண்டுவரும்படி அடித்து வதைத்து சித்திர வதை செய்யப்பட்டுள்ளார் டாக்டர் அனு காயத்திரி.

அனுவின் குடும்பம் படித்த குடும்பம். தகப்பனார் டாக்டர் மகுடபதி. பிரபல்யமான ஒரு டாக்டர். தாயார் கல்லூரி ஒன்றில் பேராசிரியை. அனு தனியார் மருத்துவக் கல்லூரி யில் கற்று, 1999ஆம் ஆண்டு தங்கப் பதக்கத்துடன் சித்திபெற்று ஸ்ரான்லி மருத்துவ மனையில் டாக்டராகப் பணியாற்றி வருகிறார். இரண்டு தம்பிமார் இவருக்கு உண்டு. ஒரு தம்பி மருத்துவக் கல்லூரியில் படித்து வருகிறார். மற்றத்தம்பி பிளஸ்ரு படித்துக்கொண்டிருக்கிறார். எல்லோரும் ஒரு குடும்பமாக ஒரேவீட்டில் தான் வசித்து வருகிறார்கள்.

### யார் இந்தக் கார்த்திகேயன்

இப்படிக் குடும்பத்தில் அனைவருமே படித்தவர்களாக இருந்தும் கார்த்திகேயனிடம் ஏமாந்திருக்கிறார்கள். யார் இந்தக் கார்த்திகேயன்? இவர் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்றவர். இவரது சொந்த ஊர் சேலம். இவரின் தந்தை டாக்டர் கலாநிதி. கோயமுத்தூர் மருத்துவ மனையில் டீனாக இருக்கிறார். தாய் கௌசல்யா சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றுகிறார். இவர்களது மூத்தமகன் தான் டாக்டர் கார்த்திகேயன். இவரது தங்கை தாரிணி பத்தாம் வகுப்புப் படிக்கும்போதே காதல் திருமணம் செய்து கொண்டாள். அனுகாயத்திரியின் திருமணம் நடைபெறுவதற்கு இரு குடும்பத்துக்கும் பாலமாக இருந்தவர் டாக்டர் மகுடபதியின் நண்பர் சண்முகம்.

தற்போதைக்கு அனுவுக்குத் திருமணம் வேண்டாம் என மறுத்த மகுடபதியிடம் மீண்டும் மீண்டும் படையெடுத்து அவர் மனதை மாற்றியிருக்கிறார்கள் கார்த்திகேயன் குடும்பததினர். அதன் பின்பு திருமணத்தை நடத்தப் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது கார்த்திகேயனின் தாய் கௌசலயா பேராசை கொண்டு வரதட்சணை பேரம் பேசியிருக்கிறார்.

அப்பொழுது மகுடபதி 100 பவுண் நகை போடுவதாகவும் கார் வாங்கித் தருவதாகவும் கூற, 100 பவுணுக்குப் பதிலாக ஒருகிலோ நகை போட்டால் நன்றாக இருக்கு மென கௌசல்யா கூறியிருக்கிறாா. அத்துடன் தனிக்குடித்தனம் நடத்துவதற்கான சாமான்களையும் வாங்கிக்கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார்.

இதற்கெல்லாம் மகுடபதி ஒப்புகொள்ள சீர்திருத்தக் கல்யாணம் நடத்துவதென முடிவு செய்திருக்கிறார்கள். சீர்திருத்தக் கல்யாணம் நடந்த மறுநாளே, இரண்டாவது முறையாக அனு காயத்திரிக்குத் தாலி கட்டப்பட்டிருக்கிறது மாப்பிள்ளை வீட்டாரால்.

### இரட்டை வேடம்

திருமணம் முடிந்த மறுநாள் பக்கத்தூரிலுள்ள கோவிலுக்குப் போவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஒப்புக்கொண்ட மகுடபதி, தனது மனைவி பிள்ளைகளோடு புறப்பட, மாப்பிள்ளை வீட்டிலிருந்து சொந்தம் பந்தமெனக் கூடி 15,20பேர் வந்திருக்கிறார்கள். கோவிலுக்குப்போனபோது அங்கு ஒரு க்லியாணத்துக்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. மணவறை, ஐயா, வாழை, தோரணம் என எல்லா ஏற்பாடுகளும் தயாரான நிலையில் செய்து வைக் கப்பட்டிருந்தது. இதைக்கண்ட மகுடபதி குடும்பத்துக்கு ஒரே அதிர்ச்சி. தங்களுக்கு ஒரு சொல் கூடச் சொல்லாது சாமி கும்பிட்டு வருவோம் என்று கூறிவிட்டு கல்யாண ஏற்பாடுகளையெல்லாம் செய்து வைத்திருக்கிறார்களே என ஒரே அதிர்ச்சி. இருந்தாலும் ஒருவாறு சமாளித்து தாலிகட்டி திருமணம் முடிந்தபின் அனுவையும் கார்த்திகேயனையும் தேன் நில வுக்காக ஊட்டிக்கு அனுப்பத்தீர் மானித்திருக்கிறார்கள். ஊட்டிக்குச சென்றவுடன் கார்த்திகேயனின் சுய உருவம் அன்று தான் அனுவுக்கு முதன் முதலாகத தெரிந்தி ருக்கிறது.

### கார்த்திகேயனின் சுயரூபம்

ஊட்டிக்கு போனவுடன் கார்த்திகேயன் நான் ஏற்கனவே பலமுறை ஊட்டிக்கு வந்துவிட்டேன். நீ வேண்டுமானால் தனியே போய்ப்பார்த்துக் கொண்டுவா. நான் இங்கே படம்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறான்.

ஆடவர்களுடன் சம்பந்தப்படுத்திப் பேசுவதையும் அடிப்பதையும் ஆரம்பித்திருக்கிறான் கார்த்திகேயன். சித்திரவதையின் அடுத்தகட்டமாகக் கார்த்திகேயன் புதிய தண்டனைகளையும் ஆரம்பித்துள்ளான். வேலைக்குப் போனால் அரை மணித்தியாலத்துக்கொருமுறை தனககு ரெலிபோன் செய்ய வேண்டுமெனக் கூறியிருக்கிறான் கார்த்திகேயன். நான் நீண்ட நாட்களாக பணியாற்றிவரும் மருத்துவமனை.

# சீரழியும் குடும்பங்கள்

அங்குள்ளவர்கள் எல்லோரும் எனது நண்பர்கள். எனக்கு அங்கு பயம் எதுவும் கிடையாது என்று அனு எடுத்துச்சொல்லியும் கேளாமல் தனக்கு அரைமணித்தியாலத்துக்குகொருமுறை டெலிபோன் செய்ய வேண்டுமென அடித்துச் சொல்லியிருக்கிறான் கார்த்திகேயன். சில நேரங்களில் வேலை நெருக்கடி காரணமாக டெலிபோன் செய்ய 5,10 நிமிடங்கள் சுணங்கி விடடால் இவ்வளவு நேரமும் என்ன செய்துகொண்டிருந்தாய்? எவனுடன் பேசிக்கொண்டிருந்தாய் எனச் சொல்லத்தகாத வார்த்தைகளால அனுவை புண்படுத்துவதுடன் அடித்துத் துன்புறுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான் அந்த ‘சைக்கோ’.

### புது யுக்தி

தான்படும் கஷ்டத்தை அனு அவளது தந்தைக்குச் சொன்னதால் ஆத்திரமடைந்த கார்த்திகேயன் புது யுக்தியைக் கையாண்டுள்ளான்.

நான் உன்னை அடிப்பதால்

# பெண் டாக்டருக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்கள்

தானே உன் பெற்றோரிடம் புகார் செய்கிறாய். இனி நான் உன்னை அடிக்கமாட்டேன். உன்னை நீயே அடித்துக்கொள். அடிவேதனை தாங்காமல் நீ கண்ணீர் விடுமட்டும உன்னை நீயே அடித்துக் கொண்டிருக்கவேண்டும் என்று கூறியிருக்கிறான் கார்த்திகேயன்.

வேகமாக உன்னை அடித்துக் கொண்டே இரு. நீ வலிதாங்காமல் அழுதால் விட்டுவிடுவேன் .நீ உடனே அழுதால் மேலும் உன்னையே நீ அடித்துக்கொள்ள வேண்டியதில்லை. அழாமல் இருந்தால் அடித்துககொண்டே இருக்க வேண்டும் என்பான். அடியின் வேதனை தாஙகாமல் அழுதால் சரி சரி வெரி குட்... வா... வா... இனிச் சிரிபார்க்கலாம் என்பான்.

இப்படித் தினம் தினம் அனுவை சித்திரவதைசெய்த கார்த்திகேயனுக்கு பிரயின் ரூமர் (மூளையில் கட்டி) ஏற்பட்டு அவன் பிழைப்பதே கஷ்டம் என டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள்.

இச் சிகிச்சை செய்வதில் பிரசித்திபெற்ற டாக்டர் சவுத்திரி அவனை பரிசோதித்துப் பார்த்துவிட்டு இது மிகமோசமான ஆப்பரேஷன் தான்.இருந்தாலும் மாக்ஸிமம் என்னால் முடிந்த அளவு செய்கிறேன் என்றார்.

கணவன்மா்கள் ஆயிரம் தவறு செய்தாலும் தம்மை அடித்து உதைத்தாலும் அவன் உடலுக்கு ஏதாவது ஒன்று நேர்ந்துவிட்டால் பதறித் துடிப்பதும் சாமிக்கு விரதமிருந்து தன் கணவன் குணமாக வேண்டிக் கொள்வதும் மனைவிகள் தான். அதேபோல் தான் தன் கணவன் உயிர் பிழைக்க வேண்டும். தன மஞ்சள குங்குமம் நிலைத்திருக்க வேண்டுமென சாமியிடம் போராடியிருக்கிறாள் அனு.

நான் இதிலிருந்து தப்பிப்பிழைத்துவிட்டால் உன்னைக் கண்கலங்காமல் பார்த்துக்கொள்வேன என அந்தநிலைமையிலும் பசப்பு வார்த்தைகள் பேசியிருக்கிறான் கார்த்திகேயன்.

### பெண்ணுக்கு எதிரி பெண்தான்

அனுவின் பிரார்த்தனை பலித்தது. அறுவை சிகிச்சை முடிந்து உயிர்பிழைத்தான் கார்த்திகேயன. அக்காலம் முதல் இக்காலம் வரை பெண்ணுக்குப் பெண்தான் எதிரி; தப்பிய கணவன் உடல்நிலை பாதித்துக் கட்டிலில் கிடக்கும் போது அவனுக்குப் பணிவிடை செய்ய அனுமதிக்கவில்லை அனுவின் மாமியார்.

அனுவை துன்புறுத்தியது மட்டுமல்லாமல் அபபரேஷன் கட்டணத்தை மகுடபதியே கட்டவேண்டுமென்று கூறியிருக்கிறார் மாமியார்.

பிரயின் ரூமருக்காக எடுத்துக் கொள்ளும் சில மருந்துகளால் கார்த்திகேயனுக்குத் தந்தையாகும் வாய்ப்புக்குறைவு என்றபோதும் அதை ஜீரணித்துக்கொண்ட அனு காயத்திரிக்கு மாமியாரின் வக்கிர வார்த்தைகள் தன்மீதே திரும்பியதை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

பிரயின் ரூமருக்கு எடுத்துக் கொள்ளும் ஒரு மாத்திரையால் குழந்தை பிறக்கும் வாய்ப்புக் குறைவு என்று டாக்டர் சவுத்திரி அனுவிடமே கூறியிருக்கிறார்.

இதை கணவனிடம் கூறி அவனைத் தேற்றியிருக்கிறாள் அனு. உங்களுக்கு நான் எனக்கு நீங்கள் என வாழ்ந்துவிடலாம். அப்படி குழந்தை வேண்டுமானால் ஒரு குழந்தையை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம் என ஆறுதல்வார்த்தை கூறியிருக்கிறாள் அனு.

உனக்கு நாகதோஷம் இருக்கிறது. உனக்குப் பிள்ளைப் பாக்கியமே கிடையாது. தப்பித்தவறிக் கருத்தரித்தாலும் கருச்சிதைவு ஏற்படடுவிடும் என்றெல்லாம் என் மனம் புண்ணாகும்படி எனது மாமியார் அடிக்கடி கூறுவார்.

கார்த்திகேயனின் தங்கை விஷயத்திலும்கூட கௌசல்யா ஈவுஇரக்கமின்றி நடந்திருக்கிறார்.

### மகளை வாழாவெட்டியாக்கிய தாய்

கார்த்திகேயனின் தங்கை தாரிணி பத்தாம் வகுப்புப் படிக்கும்போது வீட்டுக்குத் தெரியாமல் காதல் திருமணம்செய்து கொண்டு இரண்டு குழந்தைகளைப்பெற்ற பிறகு அவர்களைக் கண்டுபிடித்து குடும்பத்தைப் பிரித்து மகளுக்கு விவாகரத்து வாங்கத் தீவிரமாக முயற்சித்துக்கொண்டிருக்கிறார் இந்தக் கௌசலயா. கார்த்திகேயனின் தங்கை தாரிணியை வாழாவெட்டியாக்கிய கௌசல்யா தாரிணியின் இரு குழந்தைகளையும் சித்திரவதை செய்துள்ளார்.

சாதி வெறியால் மகளையும மருமகனையும் பிரித்த கௌசல்யா பணத்தாசையால் மகனையும் மருமகளையும் பிரிக்கவும் முடிவு செய்தாள். எதிர்பார்த்ததொகை 19இலடசத்தை வாங்கி வரும்படி அனுவிடம் கூறியிருக்கிறாள் கௌசல்யா. பணம் வராததால் அத்திரமடைந்த கௌசல்யா அனுவை வீட்டை விட்டு வெளியே துரத்தியடித்திருக்கிறாள். அப்போது அனுவின் கணவனும் அனுவுக்காகப் பரிந்து பேசவில்லை. மாமனாரும் தடுக்கவில்லை.

சில இலட்சங்களைச் செலவு செய்தாலும் தனது மகளின் எதிர்காலம் நல்லபடியாக அமையும் என்று நம்பிய மகுடபதிக்கு ஏமாற்றம் கிடைத்தது. திருமணமான ஒரே ஆண்டில் தன் மகளை வாழாவெட்டியாக்கி விட்டார்களேயென்று துடித்து எழுந்தார் மகுடபதி.

அனு காயத்திரியைப் பிரித்து வைத்தால் ஒரு வருடம் கழித்து விவாகரத்து வாங்கிவிட்டுத் தன் மகனுக்கு மற்றொரு வசதியான பெண்ணை மணமுடித்துவைகலாமென்று திட்டம் தீட்டியிருக்கிறாள் கௌசல்யா.

### சட்ட ஆலோசனை

கௌசல்யா தன் மகளை வாழ விடமாட்டாள் என அறிந்த மகுடபதி சென்னைக்கு வந்து ஹைகோர்ட் வக்கீல் பாலுவைச் சந்தித்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் கார்த்திகேயனும் அவனது தாய் கௌசல்யாவும் முன்ஜாமீன் வாங்கியிருக்கிறார்கள்.

தன் பதவி பலத்தால் அரசியல் மற்றும் பொலிஸ் செல்வாக்கைப் பயன்படுத்திய டீன் கலாநிதி, மகுடபதியையும் அனுவையும் மிரட்டியிருக்கிறார். அதாவது பத்திரிகைக்குச் சென்றால் உன் மகளின நடத்தை சரியில்லையென்று அசிங்கப்படுத்திவிடுவேன் என்று மிரட்டியிருக்கிறார். இந்த மிரட்டல்களையும் மீறி அனு காயத்திரி சென்னை பொலிஸ் கமிஷனரிடம் கார்த்திகேயன் மற்றும் அவர் குடும்பத்தினர் மீது வரதட்சணைப் புகார் ஒன்றைக் கொடுத்திருக்கிறார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வர கோபமடைந்த கார்த்திகேயன் குடும்பத்தார் அனுவிடம் விவாகரத்துக்கேட்டு வழக்குத் தொடர்நதிருக்கிறார்கள். இவ்வளவு பிரச்சினைகளையும் கொடுமைகளையும் அனுபவித்து கண்ணீரும் கம்பலையுமாக வாழும் அனு காயத்திரி இன்றும் தன்கணவருடன் சேர்ந்துவாழவே விரும்புகிறேன் என்று கூறுகிறாள்.

எதிர்காலம் கேள்விக்குறியாகிப்போனதேயென்று வேதனைப் படும் அனு காயத்திரி தனக்கு நடந்த கொடுமைகள் வேறு எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது என்பதில் தானொரு பாலமாக இருப்பேன் என் கிறார்.

### ஏமாற்றத்தில் முடியும் திருமணங்கள்

‘ஒரு வருடமாக நான் பட்ட கஷ்டங்கள் எனக்குத்தான் தெரியும். என்னைப் போலக் கஷ்டப்பட்ட வேறு பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் இவையொன்றையும் வெளியில் சொல்வதில்லை. வசதியானவர்கள் என நினைத்துக் கல்யாணம் பண்ணிக்கொடுத்து கஷ்டத்தை அனுபவிப்பதைவிட வசதி இல்லாதவனைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்வது மேல்’ என்கிறாள் அனு.

அனு காயத்திரி தன் கணவன் கார்த்திகேயன் மற்றும் மாமனார் கலாநிதி, மாமியார் கௌசல்யா மீது சொல்லும் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையா என அறிய குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கார்த்திகேயன், கலாநிதி, கௌசல்யா ஆகியோரை நேரில் சந்திக்கப் பத்திரிகையாளர்கள் முற்பட்டபோது அவர்கள் கூறும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய். இது சம்பந்தமாக மீடியாவில் பேச நாங்கள் தயாராக இல்லை. உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதைப் போட்டுக்கொள்ளுங்கள். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பதால் தான் மீடியாவில் பேசக்கூடாது என்று கூறிவிட்டார் கலாநிதி.

### சட்டம் தண்டிக்குமா?

இந்தச் சூழ்நிலையில் வரதட்சணைக் கொடுமைகளுக்கு உளளாகி வாழாவெட்டியாக நிற்கும் அனு காயத்திரிக்கு நியாயம் கிடைக்க மனிதஉரிமை மையங்களும் மகளிர் மன்றங்களும் நியா

பொ. இராசதுரை

யம் வாங்கித்தர வேண்டும். மேலும் பணத்தாசை கொண்டு தமது மகளின் வாழ்க்கையையும், தன் மருமகளின் வாழ்க்கையையும் பாழாக்கிய கௌசல்யாவும், டீன் கலாநிதியும், டாக்டர் கார்த்திகேயனும் சட்டத்தால் தண்டிக்கப்படும் வரை போராடுவேன் என்கிறார் அனுவின் தந்தை டாக்டர் மகுடபதி.


வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும குற்றமே என்று திரைப்படங்களில் வசனங்கள் ஒலிக்கிறது. ஆனால் நிஜ வாழ்க்கையில் அந்தக் குற்றம் நடந்துகொண்டேயிருக்கிறது என்பதற்கு அனு காயத்திரி ஒரு உதாரணம். இந்த நிலை மாறுவது பேராசை கொண்ட மாமியார்கள் கையில்தான் உள்ளது என்பது உண்மை. □

### “சைக்கோ கார்த்தி”

அனுவை தினம் தினம் வேறு



தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடந்த போது வேடிக்கை பார்க்க கூடிய கூட்டம்



தீவிரவாதிகள் பயன்படுத்திய ஜீப் சின்னாபின்னமாக்கப்பட்டது



தீவிரவாதிகள் எறிந்த கையெறி குண்டுகளை பொலிஸார் எடுத்து செயல் இழக்கச் செய்கின்றனர்.



தீவிரவாதிகளைச் சுட்டுக்கொல்ல குறிபார்க்கும் இந்திய இராணுவ வீரர்



சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதி ஒருவன்

அயோத்தி இராமர் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற களேபரங்களிலிருந்து....

# அயோத்தி ராமர் கோவிலை ஜீப் நெருங்கியதும் என்னை இழுத்துக் கொண்டு ஐவரும் குதித்தனர்

## தீவிரவாதிகள் சென்ற ஜீப் டிரைவர் பேட்டி

(அயோத்தி)

அயோத்தியில் பயங்கர துப்பாக்கி சண்டையில் ராமர் கோவிலைத் தகர்கக வந்த 6 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலம் பைசாபாத் மாவட்டத்தில் அயோத்தி உள்ளது. அங்கு இருந்த பாபர் மசூதி கடந்த 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அங்கு தற்காலிக ராமர் கோவிலை இந்து அமைப்புகள் கட்டின.

அன்று முதல் அயோத்தி சர்ச்சைக்குரிய பகுதியாகி அதை மத்திய அரசு தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. தற்காலிக ராமர் கோவிலுக்குச் சென்று இந்துக்கள் வழிபடுகிறார்கள் அங்கு பாதுகாப்பு பொறுப்பை பாதுகாப்பு இராணுவத்தினரும், மத்திய ரிசர்வ் பொலிஸாரும் ஏற்றுள்ளனர்.

ராமர் கோவிலுக்கு 70 மீற்றர் முன்னால் பாதுகாப்புப் படையினர் தடை ஏற்படுத்தி பாதுகாப்பு அரண் அமைத்து உள்ளனர். அந்தப் பாதுகாப்பு அரணை நோக்கி நேற்று முன்தினம் காலை 8.15 மணி அளவில் ஒரு ஜீப் மின்னல் வேகத்தில் வந்தது.

அதில் டிரைவரும் பக்தர்கள் வேடத்தில் 6 பேரும் இருந்தனர். பாதுகாப்பு அரணுக்கு சறறுத் தொலைவில் டிரைவரும், 5 பேரும் ஜீப்பில் இருந்து இறங்கிக் கொண்டனர். ஒருவன் மட்டும் ஜீப்பை வேகமாக ஓட்டிச் சென்று பாதுகாப்பு அரண் மீது மோதவிட்டான். அந்த ஜீப்பில் வெடி மருந்துப் பொருட்கள் நிரப்பபப்பட்டு இருநததால் மோதிய வேகத்தில் அது பயங்கரமாக' வெடித்துச் சிதறியது.

இதில் அந்த ஜீப்பை ஓட்டியவன் உடல் சிதறிச் செத்தான். உடனே ஜீப்பில் இருந்து இறங்கிய 5 பேரும் கையெறி குண்டுகளை வீசியபடியும், தங்களிடம் இருந்த ஏ.கே.47, ஏ.கே.56 ரக துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாக சுட்டுக்கொண்டும் தற்காலிக ராமர் கோவிலை நோக்கி முன்னேறினார்கள்.

ஆனால் சுதாரித்துக் கொண்ட பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளைத் தடுத்துநிறுத்தி சுட்டனர். இருதரப்பினருக்கும் இடையே 1 மணி நேரம் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் அந்த 5 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் பக்தர்கள் வேடத்தில் வந்த தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் என்பது பிறகு தெரியவந்தது.

ஆங்கிலப் படத்தில் வரும் சம்பவம் போல் இந்தத் தாக்குதல் இருந்தது. துப்பாக்கிச் சண்டையில் 3 பாதுகாப்பு படையினரும் ஒரு பெண் உட்பட 2 பொதுமக்களும் காயமடைநதனர். காயம் அடைந்த பெண் சாந்தி தேவி மருத்துவமனையில் .மரணம் அடைந்தார்.

சம்பவ இடத்தில் இருந்து 4 எ.கே.47 மற்றும் ஏ.கே.56 ரக துப்பாக்கிகளும், 3 கையெறி குண்டுகளும் கைப்பற்றப்பட்டன. அயோத்தி முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு முழு உஷார் நிலையில்தான் இருந்தது. தீவிரவாதிகள் பக்தர்கள் வேடத்தில் வந்ததால் அவர்கள் மீது சந்தேகம் ஏற்படவில்லை.

தற்போதும் அங்கு பெரும் பதற்றமும் பீதியும் நிலவுகிறது.

அயோத்தி ராமர் கோவிலைத் தகர்க்க திட்டமிட்ட தீவிரவாதிகள் ஒரு வாடகை டாக்சியில் (ஜீப்) தான் வந்தனர். அந்த டாக்சியின் டிரைவர் ரேகனை பொலிஸார் கைது செய்தனர்.

அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

நான் அயோத்தியில் ஒரு பெட்ரோல் பங்கில் எனது டாக்சியை (ஜீப்) நிறுத்தி வைத்து இருந்தேன். அப்போது ஒரு டாடா சுமோ காரில் 6 பேர் அங்கு வந்தனர். அவர்கள் பக்தர்கள் போல காணப்படடனர். அவர்களில் ஒருவன் என்னிடம் வந்து நாங்கள் பக்தர்கள் என்றும் இங்குள்ள புண்ணியஸ்தலங்களில் வழிபட வேணடும என்றும் அதற்கு டாக்சி வாடகைக்கு வேண்டும் என்றும் கேட்டான்.

அதற்கு நான் சம்மதித்தேன். உடனே அந்த 6 பேரும் டாடா சுமோ காரில் இருந்த தங்கள் சாமான்களை எனது டாக்சியில ஏற்றினார்கள். அதற்கு அந்த டாடா சுமோ டிரைவர் எதிர்ப்புத் தெரிவித்தார். என் டாக்சியை விட்டு விட்டு எப்படி வேறு டாக்சியில் போகலாம் என்று அந்த டிரைவர் கேட்டார். நான் அந்த டிரைவருக்கு நஷ்ட ஈடாக 70 ரூபாய் .கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்டு அந்த டிரைவர் சமாதானமாகி விட்டார்.

அந்த 6 பேரும் தற்காலிக ராமர் கோவிலில் வழிபட வேண்டும். பிறகு லட்சுமணபுரி செல்லவேண்டும் என்று கூறினார்கள். பிறகு ராஜ்காட் வழியாக டாக்சியை ஓட்டிச் சென்றேன். அந்த சாலை நிர்மோக்சன் படித்துறையில் முடிவடைந்தது.

அங்கு அவர்கள் 6 பேரும் இறங்கி அங்கிருந்த சிறிய கோவில் முன் மண்டியிட்டு வழிபட்டனர். அதன் பின் அவர்கள ஜீப்பில் ஏறிக்கொணடனர். ஜீப்பை திருப்பி தற்காலிக ராமர் கோவிலை நோக்கி ஓட்டினேன். அங்கு ராமர் கோவிலை நெருங்கியதும் என்னை இழுத்துக் கொண்டு 5 பேர் கீழே இறங்கி விட்டனர். ஒருவன் மட்டும் ஜீப்பை ஓட்டிச் சென்று தடுப்பு அரண மீது மோத விட்டான். அதன் பிறகு தான் அவர்கள் தீவிரவாதிகள் என்பது எனக்கு தெரிய வந்தது. இவ்வாறு ரேகன அழுது கொண்டே கூறியுள்ளார். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# ஆப்கானில் ஒசாமா

ஒசாமா பின்லேடனும், அவருடைய நெருங்கிய கூட்டாளிகளும் தெற்கு ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருக்கக்கூடும் என்று பாகிஸ்தான கூறியுள்ளது.

அல்-கெய்டா அமைப்புத் தலைவர் ஒசாமா பின்லேடனின் மறைவிடம் பற்றி அடிக்கடி பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன. ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில மறைந்துள்ளதாக பாகிஸ்தான் கூறுகிறது. பாகிஸ்தானில் மறைந்துள்ளதாக ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டுகிறது.

பாகிஸ்தானில் பாதுகாப்பான இடத்தில் மறைந்துகொணடு ஆப்கானிஸ்தானுக்குள் அடிக்கடி வந்து தாக்குதல் நடத்துவதாக அமெரிக்காவும் சந்தேகிககிறது.

ஒசாமா பின்லேடனின் மறைவிடம் குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அடாப் அகமது கான்செராப் கூறுகையில், பாகிஸ்தான் பகுதியில் ஒசாமா பினலேடன் இல்லை. அவரும் அவருடைய நெருஙகிய கூட்டாளிகளும் தெற்கு ஆப்கானிஸ்தானில் மறைந்துள்ளனர். ஆப்கானிஸதானின் தெற்குப் பகுதிகள் ஆபகானிஸ்தான் அரசின் முழுக் கட்டுப்பாடடில் இல்லை. எனவே ஒசாமா பின்லேடனும் தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமரும், ஒசாமாவின் வலது கரமான அய்மன் அல்-ஜாவாஹிரியும் அப்பகுதியில் மறைந்துள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை என்றார். (ற)



பிரிட்டன் இளவரசர் வில்லியம் நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செயது வருகிறார். அவர் நேற்று முன்தினம் ஆகலாந்தில் உள்ள குழந்தைகள் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்றார். அங்கு ஒரு குழந்தைக்கு பொம்மைகள் வழங்கி அவர் கொஞ்சிய காட்சியைப் படத்தில் காணலாம. நியூசிலாந்தில் மொத்தம் 11 நாட்கள் இளவரசர் சுறறுப்பயணம் மேற்கொள்கிறார்.



அமெரிக்காவில் உள்ள லாரல் நகரில் சுதந்திர தினவிழா சமீபத்தில் கொணடாடப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஒருவர் வித்தியாசமான முறையில் தலை முடியை அலங்கரித்து இருந்ததைப் படத்தில் காணலாம். பல வாரங்கள் கஷ்டப்பட்டு இந்தத் தலை அலங்காரத்தை செய்ததாக அவர் தெரிவிததார்.

# சி.பி.ஐ. அதிரடிச் சோதனை கோடிக்கணக்கான ரூபா பறிமுதல்

(டெல்லி)

இலஞ்ச ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு சொத்துக் குவித்துள்ள அரசு அதிகாரிகளின் வீடுகள், அலுவலகங்களில் சி.பி.ஐ கடந்த பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களில் இரண்டுமுறை சோதனை நடத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து மூன்றாவது முறையாகச் சமீபத்தில் நாடு முழுவதும் 183 இடங்களில் சி.பி.ஐ. அதிரடிச் சோதனை நடத்தியது.

வருமானவரி, சுங்கம், மத்திய கலால் முதலிய துறைகளில் பணியாற்றும் 50 அதிகாரிகள் உட்பட 106 பேர் இச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சோதனை முடிவில் கோடிக்கணக்கான ரூபா பணமும் ஏராளமான சொத்துக்கான ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக சி.பி.ஐ. இயக்குநர் டெல்லியில் தொிவித்தார். (து)

# இடம்பெயர்ந்தோருக்கான உதவிகளை இந்தியா தொடர்ந்தும் மேற்கொள்ளும்

## புத்தளத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(புத்தளம்)

இலங்கையில் சமாதானச் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. இச் சந்தர்ப பத்தை உரியமுறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென



இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

வன்னி அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அழைப்பின் பேரில் புத்தளத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த நிருபமாராவ் அங்கு இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களை தில்லையடியில் இவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் புத்தளம் மணல் குன்று முஸ்லிம் வித்தியாலயத்திற்கு விஜயம் செய்த அவர், உள்ளூரில் இடம்பெயர்ந்த மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்து தம்பபன்னி என்ற இடத்தில் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களையும் இவர் சந்தித்தார்.

இந்த நிலையில் நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை ஒற்றையாட்சியைக் கொண்ட நாடு என்பதை அது ஏற்றுக் கொண்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும். குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் கல்வி, சுகாதாரம் போன்ற திட்டங்களுக்கு முககியத்துவம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4,8)

# ரெஜினோல்ட் கூரே நியமனத்தால் மாகாண சபையில் பெரும் குழப்பம்

(கொழும்பு)

புதிய முதலமைச்சர் பதவியேற்ற பின்னர் மேல்மாகாண சபை நேற்று முன்தினம் கூடியது.

மாகாண சபை கூடிய போதும் சபையில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது.

முதலமைச்சராக மீண்டும் ரெஜினோல்ட் கூரே நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்தே அங்கு குழப்பம் ஏற்பட்டது.

முதலமைச்சராகவிருந்த நந்தன மெண்டிஸை பதவியிலிருந்து நீக்கியமை தொடர்பாகவும் மீண்டும் ரெஜினோல்ட் கூரேயை நியமித்தமை தொடர்பாகவும் தமது கட்சிக்கு தெளிவுபடுத்தவில்லையென உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்.

அதேவேளை, கூட்டமைப்பின் பங்காளரான ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மகேஸ் அல்மேதா எதிர்க் கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேலும் பங்காளரான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ரேணுகா பெரேரா சுயாதீன உறுப்பினராகச் செயற்படப் போவதாகக் கூறினார்.

உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைக்கு அறிவிக்கவுள்ளதாக மேல் மாகாண சபையின் முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே அங்கு தெரிவித்தார். (ற-8)





தந்தை செல்வா சதுக்கம் பொலித்தீன் பைகளால் நிறைந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:-ஞா. ஐங்கரன்)

# ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் முன்னாள் கல்விச் சேவைத் துறையைச் சார்ந்தவர்கள் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கம் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விச்சேவைத் துறையைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலானோர் கடந்த திங்கட்கிழமை பகல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனுராதபுரம் டி.எஸ். சேனநாயக்க சுற்றுவட்டத்திற்கு அருகிலும் கல்விச்சேவைத்துறையைச் சார்ந்தவர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தினதும் அனுராதபுர பௌத்த பிக்குகள் பல்கலைக்கழகத்தினதும் கல்விசாரா ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். (அ-2)

# பங்குக்குரு பணிமனை திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதி லிகோரியார் தேவாலயத்தில் பங்குக் குரு பணிமனை கடந்த மாதம் 30 ஆம் திகதி யாழ். மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், 521ஆவது பிரிவு கட்டளைத் தளபதி, தென்மராட்சி பொது அமைப்புகள் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்துகொண்ட இந் நிகழ்வு ப.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. (து-29)

# மேஜர் பொபி முன்பள்ளி திறப்புவிழா

(வவுனியா)

கிளிநொச்சி கனகபுரத்தில் மேஜர் பொபி முன்பள்ளி, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பிரிவுப் போராளி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னதாக மேஜர் பொபியின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ மருத்துவப் பொறுப்பாளர் மனோஜ் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

மேஜர் பொபி முன்பள்ளியின் விளம்பரப் பலகையினை தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா திரைநீக்கம் செய்தார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்ததுடன், முனபள்ளிச் கட்டடத்திற்கான நாடாவை வெட்டித் திறந்து கருத்துரையினையும் வழங்கினார். (அ)

# ஹங்கொடவள சோமதேரர் கொலை; விசாரணைகள் யாவும் பூர்த்தி

(கொழும்பு)

ஹங்கொடவள சோமதேரர் கொலை தொடர்பான விசாரணைகள் முடிவடைந்திருப்பதாக ஜனாதிபதி விசேட ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியிடமிருந்து தகவல் கிடைத்ததும் கொலை தொடர்பான விசாரணை அறிக்கை ஆணைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படுமென அதன் செயலாளர் எட்டன் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதி விசேட ஆணைக் குழு கடந்த வருடம் டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டது. அன்றிலிருந்து இக்குழு தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்தது.

உயிரிழந்த தேரரின் உறவினர்கள் நண்பர்கள் உட்பட பலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னாள் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எதிர சூரியா, பேராசிரியா மென்டிஸ, றோகவீர, வைத்திய நிபுணர் அனுரா விஜயசுநதர ஆகியோர் ஜனாதிபதி விசேட ஆணைக் குழுவில் இடம்பெற்றிருநதமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# மின்சக்தியைப் பேணிக்காத்தல் நிதியம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

இலங்கையில் மின்சக்தியை அதிகரிப்பதற்கு தனியார் துறையினரை ஊக்குவிப்பதற்காக மின் சக்தி எரிபொருள் அமைச்சு பல நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

மின் சக்திகளின் வீண் விரையங்களை 10 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை மாலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மின் சக்தியைப் பேணிக் காத்தல் நிதியத்தின் அங்குரார்ப்பண விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், நாடளாவிய ரீதியில் சிறியளவிலான நீர்மின் உற்பத்திகளை ஆரம்பிக்கவென 200 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுளளது என்றும் மின்சாரசபை தனியார் மயப்படுத்தப்படமாட்டாது எனவும் மின்சார சபை இலாப மீட்டும் நிறுவனமாக மறுசீரமைக்கப்படவுள்ளது. இதற்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியாகி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மின்வலுவை உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்களுக்கு 50 மில்லியன் ரூபா நிதியுதவி அளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, நீர்மின் உற்பத்திக்கான மேல் கொத்மலைத் திட்டமும் நுரைச்சோலை அனல் மின் திட்டமும் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)

# பல்கலை மாணவருக்கான மாதாந்த ரயில் பருவகால சீட்டு வழங்கல்

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக மாதாந்த ரயில் பருவகால சீட்டுக்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவ ரயில்வேத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த மாதத்திற்கான பருவகால சீட்டுடன் மாணவ அடையாள அட்டையை சமர்ப்பிப்பதன் மூலம் இந்த மாதத்திற்கான ரயில் பருவகால சீட்டுக்களைக் பெற்றுக்கொள்ள முடியுமம.

எவ்வாறாயினும் மீண்டும் புதிய பருவகால சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்கு தமது மாணவ அடையாள அட்டையை நிரூபிப்பதற்கான படிவத்தை சமர்ப்பிப்பது அவசியமெனவும் ரயில்வே பொதுமுகாமையாளர் பிரியா டி சில்வா தெரிவித்துள்ளார். (அ-9)

# புத்தளம் அகதிமுகாம் மக்களுக்கு ஆஸி.அரசு 320 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து புத்தளம் அகதி முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணமாக 320 மில்லியன் ரூபாவை அவுஸ்திரேலியா அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்த உதவியின் மூலம் அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் செயற்திட்டமொன்றும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினூடாக செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிதியுதவி வழங்கும் ஒப்பந்தத்தில் அவுஸ்திரேலிய அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினரும் கொழும்பில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டனர்.

இந்தத்திட்டம் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் கண்காணிப்பில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளம் நலன்புரி நிலையங்களில் சுமார் 60 ஆயிரம் மக்கள் உள்ளதாகவும அவர்களில் சிலர் சொந்த இடங்களுக்கு செல்ல விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேறு இடங்களில் அவர்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் புத்தளம் மாவட்டத்திலே செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜெயசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# ஆகிரா மாதப் பிறை

(கொழும்பு)

ஹிஜ்ரி 1426 ஆகிரா மாதத்திற்கான தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு இன்று மஃரிப் தொழுகையின் பின் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் அமைந்துள்ள மதறஸதுல் ஹமீதியா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலமாக்கள், கதீப்மார்கள்,ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய கலாசார அமைச்சு ஸாவியா, தாக்கியா பிரதிநிதிகள் அனைவரும் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று மஃரிப் தொழுகை நேரமாகிய -07.02 முதல் ஜமாதில் ஆகிரா மாதத்தின் தலைப்பிறையைப் பார்க்கும் படியும் தலைப்பிறை கண்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் 2890788, 2432110, 2434651, 0777 286099 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத்தருமாறும் சகல முஸ்லிம்களையும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கேட்டுள்ளது. (அ-2)

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் நடாத்தப்பெறும் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரியில் உள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து செல்வன் சு.ரகிந்தன் தலைமையில் திருவாசக பஜனை,வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் செ.பரமேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன. (அ)

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் - குறள்

வலம்புரி

# குற்றவாளிகளைப் பாதுகாக்கும் மரணதண்டனைத் தீர்ப்பு

நீதிபதி அம்பேப்பிட்டிய கொலைசெய்யப்பட்டது தொடர்பில் ஐந்து குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வீதிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிக்கே பாதுகாப்பு வழங்கமுடியாத இந்த நாட்டில் சாதாரண மனிதர்களுக்கான பாதுகாப்பு எவ்விதம் இருக்கும் என்பதை ஊகித்துக்கொள்வதில் சிரமம் இருக்கமுடியாது.

குற்றவாளிகளுக்குத் தண்டனை விதித்தமைக்காக நீதிபதி அம்பேப்பிட்டிய கொலைசெய்யப்பட்டார் எனில், இந்த நாட்டில் குற்றவாளிகளின் எண்ணிக்கை தாராளமாக அதிகரித்துவருகின்றதென்பதே பொருளாகும்.

இதற்கான காரணம்தான் என்ன? என்பது ஆராயப்படவேண்டியதொன்றாகும். பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் குற்றவாளிகளைக் கைதுசெய்வதிலும், தண்டனை வழங்குவதிலும் தமது கடமையைச் செய்தாலும் நாட்டின் அரசியல் அமைப்பில் இருக்கக்கூடிய அதிகார எல்லைகள் நீதிபரிபாலனத்தின் கடமையை தூக்கியெறிவதாக உள்ளது.

அதாவது, நீதிமன்றத்தால் மரணதண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

அவ்வாறாயின் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டாலும் ஜனாதிபதியிடம் மன்னிப்புப் பெற்று குற்றவாளி தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அதேநேரம் பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் அரச பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் கோரமாக கொலைசெய்யப்பட்டனர்.

இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மேல்நீதிமன்றம் ஐந்து குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பின்போது மரணதண்டனை பெற்ற பொலிஸ் ஒருவர் நீதிமன்றத்திலேயே ஓவென்று கதறி அலறினார். மரணதண்டனை தீர்ப்பைக்கேட்டு அவர் அழுத அழுகை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கொலைசெய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் எவ்வாறு கதறியிருப்பார்கள் என்பதை கோடிட்டுக் காட்டியது.

படுகொலைக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு . மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கிய போது நீதிமன்றங்கள் இன, மத, மொழி என்ற பேதங்களைக் கடந்து செயற்பட ஆரம்பித்துவிட்டன என்ற பேச்சுக்கள் அரசியல் ஆர்வலர்களிடமிருந்தும், அவதானிகளிடமிருந்தும் வெளியாகின.

நீதிமன்றங்கள் தமது கடமைகளை எவரது தலையீடுகளுமின்றிச் செம்மையாகச் செய்யுமாயின் இனவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லாது போகும்.

கடந்தகாலங்களில் நீதிபரிபாலனங்களில் ஏற்பட்ட வழுக்களே இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கும், இனப்பாகுபாடு உச்சம்பெறுவதற்கும் காரணமாக இருந்தன.

எனினும் அந்த நிலைமையை பிந்துனுவெவ படுகொலைச் சம்பவங்களுக்கான தீர்ப்பு மாற்றிவிட்டதென தமிழ்மக்கள் கருதினர். ஆனால் மரணதண்டனை பெற்ற குற்றவாளிகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மீளாய்வு மனு, அவர்களுக்கு விடுதலை வழங்கியது. இவை நடந்துமுடிந்த நிகழ்வுகள்.

மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்படுவதும், உயர்நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்யப்படுவதும் சட்டத்தில் உள்ள விடயங்கள் என்பதால் அதுபற்றிய விமர்சனங்களுக்கு இடமில்லை.

ஆனால் பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் எங்கே இருக்கிறார்கள்?. அவர்களைக் கண்டறிவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்பதே தமிழ்மக்களிடம் எழுந்துள்ள கேள்வியாகும்.

இந்த கேள்விக்கு சரியான விடையைத் தராத வரை மரணதண்டனைத் தீர்ப்பென்பது குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதற்கான ஓர் வழிமுறையாகவே கருதப்படும்.

# மாகாண பொதுச்சேவை வெற்றிடங்களுக்கு கீழ் உழைப்புப் பட்டதாரிகளை நியமிக்குக!

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையிலுள்ள வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகள் கீழ் உழைப்பு நிலையுயர்வு பட்டதாரிகள் மூலம் நிரப்புமாறு கோரி அரச சேவை கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

இம் மகஜர் கடந்த திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கத்திடம் அரச சேவை கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தால் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மேற்படி மகஜரில் மேலும் தெரிவிக்கப் படுள்ளதாவது,

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி வேலை வழங்கல் திட்டத்தின் மூலம் பட்டதாரிகளுக்கு உரிய இடம் கிடைக்க ஆவன செய்யும் தங்கள் நடவடிக்கைகளையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

1. ஏற்கனவே போட்டிப் பரீட்சையின் மூலம் இப்பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட நாம் மீண்டும் போட்டிப்பரீட்சைக்குத் தோற்றியமை மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

2. 3மாத பயிற்சி பெற்ற வேலையற்ற பட்டதாரிகளுக்கு நேர்முகப்பரீடசையின் போது 25 புள்ளிகள் வழங்கப்பட ஏற்கனவே எமது அங்கத்தவர்களில் 5 வருடம்,10வருடம்,15 வருடங்களுக்கு மேல் அரச சேவையில் சகல பயிற்சிகளையும பெற்று கீழ் உழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகளுக்கு எதுவித புள்ளிகளும வழங்கபடாமையும், சேவை மூப்பும் கவனித்துக் கொள்ளாமை எமக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் ஆகக்கூடியது 35 வயதுக்குட் பட்டவாகள் புதிய நியமனம் பெறத்தகுதிபெற்றவர்கள். கீழ் உழைப்புப் பட்டதாரிகளில் அனேகமானவர்கள் 50 வயதை அடைந்து இருப்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

மேலும் இணைந்த சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 2/93 திகதி 30.04.93 இன் பிரகாரம் தற்சமயம் சேவையிலுள்ள கீழ் உழைப்புப் பட்டதாரிகளை இப்போது அவர்கள் பெறும் வேதனாதிகள,வேலை நிபந்தனைகள், அவர்கள் அனுபவிக்கும் சலுகைகள் முதலியவற்றில் எவ்வித மாற்றமும் இன்றி பட்டதாரிகள் பதவி வழங்கும் திட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளபபட வேண்டும் எனபதையும் தங்களின் மேலான கவனத்திறகுத் தெரியப் படுத்திக் கொள்கின்றோம்.

மேலே குறிப்பிட்ட கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் அதே திகதியில் எங்களுக்கும் நியமனம் வழங்க ஆவன செய்து தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.


(ரு-19)

# வடக்கு-கிழக்கு பிரச்சினையிலிருந்து மலையகப் பிரச்சினை வேறுபட்டதல்ல

## -அமெரிக்காவில் ம.ம.மு.தலைவர் பெ. சந்திரசேகரன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தமிழர்களின் பிரச்சினையிலிருந்து மலையகத்தமிழ் மக்களின் பிரச்சினை எவ்விதத்திலும் வேறுபட்டதல்ல என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன தெரிவித்துள்ளார்.



வட அமெரிக்காவின் தமிழ்ச்சங்கப் பேரவையின் அழைபபின் பேரில் மலையக மக்கள் முனனணியின் தலைவர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்துளளார். இதன் போது அங்கு நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் சிறுபான்மை மக்களின் அரசியல் தீர்வுகள் தொடர்பாக ஆராயும்போது மலையக மக்களையும் இணைத்துக்கொள்வது அவசியமானதாகும்.

இந்த நிலையில் மலையக மக்கள் இதற்குரிய தீர்விலிருந்து புறக்கணிக்கப்பட்டால் அங்கும் ஓர் அரசியல் நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்கமுடியாமல் போய்விடும் என அவா மேலும் தெரிவித்தார்.

(ரு-4)

# முத்தலிப் படுகொலை; சந்தேக நபர் கைது

(இரத்மலானை)

லெப்ரினன் கேணல் மேஜர் நிஸாம் முத்தலிப்பின் கொலையில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

இரத்மலானை அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வைத்து இச்சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படியே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

(ரு-4)

# நிவாரண நிதியை கையாள்வதற்கு மாவட்ட குழுக்களுக்கே அதிகாரம்

## நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பிரதேச மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கான நிதி பொதுக்கட்டமைப்பின் மாவடட நிர்வாகத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டு செயற்படுத்தப்படுமென்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நிதி ரீதியிலான பயன்பாட்டை மேற்கொள்ள மாவட்டக் குழுவுககே சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.ஆகவே மக்களுக்கு வழங்கப்படும் நிதியினை மாவட்டக் குழுவே மேற்கொள்ளும். இந்த மாவட்டக்குழுவில் அரச அதிகாரிகளே இடம்பெறுவர்.

அதேவேளை, இதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியம் தொடாபான கணக்காய்வுகள் யாவும் கணக்காய்வாளர் நாயகத்தினால மேற்கொள்ளப்படும். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துக் ரெட்டி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே நிதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பின் செயற்பாடுகள் மிகவிரைவில் செயற்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரு-8)

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மருந்து நாடளாவிய ரீதியில் இம் மாதம் 9ஆம் திகதியும் 23ஆம் திகதியும் ஏற்றப்படவுள்ளது.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்திலும் யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிமனையூடாகவும், யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய பணிமனையினாலும் இத் தடுப்பூசி மருந்து வழங்கப்படவுள்ளது.

இவ் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மருந்தானது ஒரு வயது தொடக்கம் ஐந்து வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு ஒவ்வொரு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், மகப்பேற்று நிலையத்திலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஐந்து வயது தொடக்கம் 10 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலைகளிலும் வழங்கபபடவுள்ளது.

இத தடுப்பூசி மருநது மூன்று கட்டங்களாக ஏற்றப்படவுள்ளது. முதற்கட்டமாக இம் மாதம் 9ஆம் திகதியும் இரண்டாம் கட்டமாக எதிர்வரும் 23ஆம் திகதியும், மூன்றாம் கட்டமாக ஒருவருடத்தின் பின்பும் ஏற்றப்படவுள்ளது.

அத்துடன்,ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு ஒரு வருடங்களைப் பூர்த்தி செய்த சிறுவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி மருந்தும் வழங்கப்படவுள்ளது. (ரு-19)



## சாயி அருளமுதம்

இனறு உங்கள் நண்பர்கள் ஒட்டியிருப்பது உங்களுடைய பணப்பையுடனோ அல்லது உங்களுடைய தந்தையாருடைய தயவினால் கிடைக்கக் கூடிய ஏதாவது அனுகூலத்துடனோ, அன்றி உங்களுடனல்ல. உங்கள் பணப்பை காலியானால் அல்லது உங்கள் தந்தையார் அதிகாரத்தில் இல்லாது போனால் அவர்கள் உங்களிடமிருந்து விலகிச் சென்றுவிடுவார்கள். கெட்ட பழக்கத்துக்கும் துர் நடவடிக்கைகளுக்கும் ஒருவரை இழுத்துச் செல்லக் காத்திருக்கும் பல நண்பர்கள் பலிக்கடாக்களைத் தேடித்திரிகின்றனர்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# முஸ்லிம்களை ஒதுக்கித் தமிழீழம் இல்லை

## திருமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம்

முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களின் எதிரிகள் அல்ல. அவர்களை விட்டுவிட்டு நாங்கள் தமிழீழம் கேட்கவில்லை. அவர்களைத் தேவைகருதியே 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற்றினோம் என திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்துள்ளார்.

சோனையூர் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம இடம்பெற்ற கரும்புலிகள்தின நிகழ்வின்போது, மூதூர் பிரதேச கிராமிய படையில் இணைந்து பயிற்சிபெற்ற 3 ஆயிரம்பேரை சந்தித்தவேளையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவிகளைக் கொல்வதற்காக நாங்கள் ஆயுதத்தை கையில் எடுக்கவில்லை. விடுதலைக்காகவே ஆயுதங்களை கையில் எடுத்தோம்.

முஸ்லிம்களும் தமிழ்பேசும் மக்களே. அவர்களை ஒதுக்கி நாங்கள் செயற்படமுடியாது. அவர்களுடனான ஒற்றுமையைப் பேண வேண்டும். விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு மார்க்கம் உள்ளது. ஊர் பிரச்சினைகளுக்காக மக்கள் சண்டை பிடிக்கக் கூடாது. கட்டுப்பாடுகளை உருவாக்க வேண்டிய கடமைப்பாடு அனைவருக்கும் உள்ளது.

இன்னொரு யுத்தம் ஏற்பட்டால அது மிகக்கொடூரமாக இருக்கும். 3 வருடங்களாக இருதரப்பாரும் தயாராகிக்கொண்டிருப்பதாக தெரிவித்த கேணல் சொர்ணம், இராணுவ ரீதியாக புலிகள் பலமாக இருக்கின்றனர்.

மக்கள் இனியும் அவலங்களைச் சந்திக்கக்கூடாது. மக்களின பின்னால் தலைவரும், விடுதலைப் புலிகளும் இருக்கின்றார்கள்.

அவர்கள் மக்களின் சொந்த உறவினர்கள். ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் மக்கள் இருக்கவேண்டும் என தெரிவித்துள்ளார். (அ-9)



தமிழீழ அரசியல்துறை நடுவகப் பணியகத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

### மாநகரசபை டிராக்டர் மோதி பாடசாலை மாணவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் உழவு இயந்திரம் பாடசாலை மாணவியுடன் மோதியதில் அம்மாணவி காயமடைந்தார். இச்சம்பவம் நேற்றுக்காலை 11 மணிக்கு நாவாந்துறையில் நடைபெற்றது.

இந்த விபத்தில் காயமடைந்த அதேயிடத்தைச் சேர்ந்த மகேந்திரம் சாளினி (வயது 10) என்ற மாணவி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் சம்பந்தப்பட்ட உழவு இயந்திரத்தை யாழ். பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துவந்ததோடு சாரதியையும் கைதுசெய்தனர்.

இதேவேளை நேற்று புங்கன்குளச் சந்தியில் மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கரவண்டியில் சென்ற பாடசாலை மாணவனும் மோதியதில் இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-19)

### சேது சமுத்திரத்...

பட்ட உறுதிமொழிகள் கொண்டதான நீண்ட அறிக்கையொன்றை இன்று அமைச்சர் கதிர்காமர் சபையில் சமர்ப்பிப்பார்.

இதேசமயம் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள சூழலியல் பிரச்சினைகள் குறித்து இலங்கை இந்திய அதிகாரிகள் இம்மாதம் நடுப்பகுதியில் ஒன்றுகூடி ஆராயவிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

### சுனாமியால்....

துக்கு மேலதிக வீடுகளினை அமைக்க நிதியினை வெளிநாட்டிடமிருந்துபெற உறுதியளித்துவிட்டு, இங்கு 27 ஆயிரம் வீடுகளை மட்டுமே அமைத்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. (ச-6)

## சுனாமி நட்ட ஈடு

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இறந்த ஒருவர் சார்பாக அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு ரூபா 15ஆயிரமும் மேலதிக கொடுப்பனவாக ரூபா 5 ஆயிரமும் உலர் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அட்டையும் வழங்கப்பட்டுள்ளன.

அனர்த்தமுகாமைத்துவ பிரிவின் இணைப்பு ஆலோசகர் எ.எஸ். எக்கநாயக்க தகவல் தருகையில், பரவலான ஒரு திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர்கள் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளனர் என்றும்,

இருந்தபோதிலும் நிவாரண உதவி விநியோகத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துவருகின்றன என்றும்,

இத்தகைய முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுனாமி அனர்த்தம் காரணமாக 500 இற்கும் அதிகமான அரசதுறை ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் சகலவிதமான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளும் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (அ-2)

### பரீட்சை பெறுபேறு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2004 ஆம் ஆண்டு இறுதித் தேர்வினை எழுதிய மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அவற்றை அலுவலக நேரத்தில் பார்வையிடமுடியுமென கோப்பாய் ஆசிரிய் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி அறிவித்துள்ளார். (ச)

## பொதுக் கட்டமைப்பு நகலிற்கு....

ஜே.வி.பியினால் தாக்கல்செய்யப்பட்ட மனுவை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்களான ராஜா பெர்ணாண்டோ, நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் விசாரணைக்கு அழைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இந்த நிராகரிப்பு அறிவித்தலைத் தெரிவித்தார்.

பொதுக் கட்டமைப்பானது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரண நடவடிக்கைகளுக்காகவே அமைக்கப்பட்டது.

எனவே இப் பொதுக் கட்டமைப்பு யோசனையை நீங்கள் ஏன் எதிர்க்கவேண்டுமென அவர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த மனுதாரர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பொதுக்கட்டமைப்பானது வடக்குக் கிழக்கில் தனி நாட்டுக்காகப் போராடும் விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது. அதனாலேயே மனுதாரர்களின் சார்பில் நாம் அதனை எதிர்க்கின்றோம் எனக் கூறினர்.

இதேவேளை பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக தாக்க்ல்செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம் மனுக்களின் பிரதிவாதிகளாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜெயசிங்க, விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலக அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ சன், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச-8)

## நீதிபதி அம்பேப்பிட்டிய கொலைவழக்கின் மரணதண்டனை கைதிகள் மேன்முறையீடு

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய மற்றும் பொலிஸ் பரிசோதகர் உபாலி அமரசிங்க ஆகியோரைப் படுகொலைசெய்தமை சம்பந்தமாக மரணதண்டனை விதிக்கப்பட்ட நௌபர் உட்பட்ட ஐவரையும் விடுதலை செய்யுமாறு கோரி இவ்வாரத்தினுள் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளதாக சட்டத்தரணி லக்ஷ்மன் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் தீர்ப்பை வழங்கியது மேல்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அடங்கிய குழு வென்பதால் மேன்முறையீடு செய்ய வேண்டியது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்ல. உயர்நீதிமன்றத்திலேயே எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளில சாட்சிகளின் சாட்சியங்களில் முரண்பாடு காணப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்கறிஞர்கள் எழுத்துமூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்தபோதிலும் தீர்ப்பு வழங்கியபோது நீதிபதிகள் அதுபற்றி கவனம்செலுத்தவில்லை என்றும், அதனால் அவர்கள் ஐவரையும் விடுதலை செய்யுமாறுதான் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்போவதாகவும் லக்ஷ்மன் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ச-4)

### தமிழ் யுவதி கொழும்பில் கைது

போலி அடையாள அட்டை வைத்திருந்த தமிழ்ப்பெண் ஒருவரும் அவருக்கு உதவிய கிராம சேவகர் ஒருவரும் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த வீரமுனி தயாபாலனி மற்றும் இரத்தினசிங்கம் இரத்தினகுமார் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். (ச-4)


நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
6'2"
காட்சி நேரம்: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
வெகுவிரைவில்
அர்ஜுன், சினேகா நடித்த
சின்னா

மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம்.சதா. விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹரீஸ் ஜெயராஜ்






நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
சரத்குமார், ரமேஷ், பூஜா நடித்த
ஜித்தன்
காட்சி நேரம்: 11.00, 2.45 06.00 (பு.நே)

நியூ சிற்றி றேடேர்ஸ்
எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226
(C-அ-1348)

சேவைநலம் பாராட்டல்


இலங்கை வங்கிச் சேவையில் 30 வருட காலத்தினை பூர்த்திசெய்து 07.07.2005 இல் ஓய்வுபெறும் திரு.V.S.குலசிங்கம் அவர்களின் சேவையைப் பாராட்டி, அவரின் குடும்பம் நலம்பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
இலங்கை வங்கி மேற்தரக்கிளை
பிரதான முகாமையாளரும்,
ஊழியர்களும்.
(9729)

பதவி வெற்றிடம்
▶ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
ஆண்கள் (இரவு /பகல் கடமை)
▶ பத்திரிகை விநியோகஸ்தர்கள
(சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர்)
வலம்புரி நிறுவனத்திற்கு 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 08.07.2005 அன்று காலை 10மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.
ஆளணி முகாமையாளர்
வலம்புரி.
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.